
# திருக்கோயில்





திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 14.9.2003 அன்று ஆடித் திருத் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரி சங்கர் இ.ஆ.ப. அவர்கள் வடம்பிடித்துத் தேரோட்டத்தைத் தொடக்கி வைத்தார்கள். ஆலய நிலங்கள் சிறப்புப் பணி அதிகாரி திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி.பிஎல்., திருக்கோயில் இணை ஆணையாளர் - செயல் அலுவலர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் பிஏ.பிஎல்., மற்றும் உபயதாரர் திருக்காரணி எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் முன்னிலையில் இத்திருத்தேர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.



# திருக்கோயில்

## திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |


மாலை 45 · திருவள்ளுவர் ஆண்டு 2034 · சுபானு - ஐப்பசி அக்டோபர் 2003 · மணி 10



**சிறப்பாசிரியர்**

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

**முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி**

**"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்**

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பி.எல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி


<u>முகப்பு</u>

**அருள்மிகு மகாலட்சுமி**

## பொருளடக்கம்


நம்பினார் கெடுவதில்லை
- திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

திருமந்திர உபதேசம்
- திருமந்திரச் செம்மல் திருமிகு
டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

நவராத்திரியின் சிறப்பு - முனைவர் த. அமிர்தலிங்கம்

தீபாவளி - நடராசன் அடிமை

திருச்செந்தூர் தல வரலாறு - ந. கல்யாணசுந்தரம்

நம்மை வணங்கும் தெய்வம் - கவிஞர் குமர விருச்சிகன்

நினைக்கும்போதே செய்துவிடு (நீதிக்கதை)
- கலைமாமணி மா. லட்சுமணன்

நூல் மதிப்புரை - 'நிறைமதி'

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
- சிவஞானச்சித்தர் முருகதாஸ் தீர்த்தபதி

தேனாக அருள் சுரக்கும் தெவிட்டாத அற்புதமே!
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

வாழையடி வாழை என வந்தத் திருக்கூட்டம்
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

அம்மான் - சேது. சிவா

கண்களே தீபமாய் - கவிஞர் விசுவநாதன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

*தொலைபேசி: 28334811, 28334812, 28334813*

# நம்பினார் கெடுவதில்லை

திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

சமயகுரவர்களில் ஒருவரும், ''உழவாரப் பணி'' புரிந்த ஒப்பற்ற அருளாளருமான அப்பர் சுவாமிகள்

''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே''

என்று பாடியுள்ள தேவாரப் பாடல், நாம் நமக்கு உரிய கடமையை நம்பிக்கையோடு ஆற்றியிருப்போமேயானால், இறைவன் நம் நம்பிக்கையைக் காப்பாற்றி, நம்மைக் காப்பாற்றி மேன்மை செய்வான் என்று உறுதிபடக் கூறியிருக்கக் காணுகின்றோம்.

பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் அனைவரும் இத்தகைய நம்பிக்கையோடு தமக்குரிய தெய்வப்பணியினை ஆற்றி வாழ்ந்த அருங்குணச் செம்மல்கள் ஆவர். ஆகவேதான் தெய்வச் சேக்கிழார் பெருமானும் அடியார்கள் அருங்குணச் சிறப்பினைப் போற்றி ''திருக்கூட்டச் சிறப்பில்'' பாடும்போது

''மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்''

''பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்''

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

''ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம்ஈசன் பணி அலாது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ?''

என அடியார்களின் நம்பிக்கையைத் - திருத்தொண்டினை - நெஞ்சுறுதிச் சிறப்பினை - வீரத்தை எடுத்து இயம்புதல் அரிதிலும் அரிது என்ற பாடியிருக்கக் காண்கின்றோம். பஞ்சபூதங்கள் கலங்கினாலும் கூடப் பரமன் பணியே பணியாய் வாழும் நாயன்மார்கள் தம் உள நம்பிக்கை மாறுவதில்லை. ஏற்றுக் கொண்ட இறைப்பணியைக் கைவிடுவதில்லை என்பதற்கு அப்பூதிநாயனார் வாழ்க்கையைக் காண்போம்.

திங்களைப் போல் குளிர்ந்த சோலைகளைக் கொண்டு விளங்கும் திங்களூர் என்ற சோழ நாட்டுத் திருத்தலத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் அப்பூதி அடிகள். அந்தணர் குலத்தில் பிறந்த அப்பூதி அடிகள். அப்பர் அடிகளின் பெருமைகளைக் கேள்வியுற்றுக் காணாமலே அவர்மேல் பக்தி பூண்டு ''திருநாவுக்கரசு'' என்ற திருநாமத்தையே எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டு அதனைத் தம் வாழ்வின் பேறாக எண்ணி மகிழ்ந்திருந்தார்.

தம் வீட்டிலிருந்த பொருள்கள் அனைத்திற்கும் ''திருநாவுக்கரசு'' என்ற திருநாமம் சூட்டி அழைத்து வந்த அவருடைய பக்தியை என்னென்று போற்றுவது? வீட்டிலுள்ள அளக்குங் கருவிகளுக்கும் ''திருநாவுக்கரசு'' என்று பெயர்; நிறுக்குங் கருவிகளுக்கும் ''திருநாவுக்கரசு'' என்று பெயர். தம் குழந்தைகளுக்கும் ''திருநாவுக்கரசு'' என்றே பெயர். பசுக்கள் முதலான கால்நடைகளுக்கும் கூட ''திருநாவுக்கரசு'' என்ற பெயரே வைத்து நாளும் ''திருநாவுக்கரசு, திருநாவுக்கரசு'' என்றே இறைவர் அப்பரடிகளுக்குச் சூட்டிய பெருமைமிகு பெயரான ''திருநாவுக்கரசு'' எனும் திருநாமத்தைக் காதல் கொண்டு ஓதி வந்தார் அப்பூதி அடிகள்.

அடியார்களுக்கு மடம் அமைத்தார். அதற்குத் ''திருநாவுக்கரசு திருமடம்'' எனப் பெயர் வழங்கினார். அடியார்களுக்குத் தண்ணீர்ப் பந்தல் அமைத்தார்.

அதற்கும் ''திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தல்'' எனப் பெயர் வழங்கினார். இவ்வாறு காணாமலே திருநாவுக் கரசர் பால் காதல் கொண்டு திருத்தொண்டுகள் பற்பல புரிந்து வந்த அப்பூதி அடிகளார் அறச்செயலைச் சேக்கிழார் பெருமான்

''வடிவுதாம் காணா ராயும்
மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பி ரானார்
அருளும்கேட்டு அவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவிலா அறங்கள் செய்து
முறைமையால் வாழும் நாளில்''

(அப்பூதி அடிகளார் புராணம் 3)

என்று போற்றியிருக்கக் காணுகின்றோம். பல திருத்த லங்களையும் தரிசித்தவாறு தலயாத்திரை வந்து கொண்டிருந்த திருநாவுக்கரசர் திங்களூருக்கு வந்த போது அவ்வூரில் தம் பெயரில் பற்பல அறங்கள் நிகழ்ந்து வருவதைக் கண்டு அதிசயமுற்றார்.

''திருநாவுக் கரசெனும் பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாம்
கண்டார்'' (அப்பூதி. 6)


''இத்தண்ணீர்ப் பந்தலை அமைத்தவர் யார்?'' என அங்கிருந்தவர்களிடம் திருநாவுக்கரசர் வினவ, அவர்களும்,

''ஆண்ட அரசெனும் பெயரால் செப்பருஞ்சீர்
அப்பூதி அடிகளார் செய்து அமைத்தார்''

என்று உரைத்ததோடு, ''திருநாவுக்கரசு திருக்குளம்'' ''திருநாவுக்கரசு நந்தவனம்'' என மேலும் பல அறங் களையும் அப்பூதி அடிகளார் செய்துள்ளாரே! அவற்றை யும் இவ்வூரில் நீங்கள் காணலாம்'' என்று அறிவிக் கிறார்கள்.

''அப்பூதியடிகளைக் காணவேண்டும்'' என் கிறார் திருநாவுக்கரசர். அங்கிருப்பவர்களும் அவரைத் ''திருநாவுக்கரசர்'' என அறிந்து கொள்ளவில்லை. முன்பின் பார்த்திருந்தால்தானே அவர் ''திருநாவுக் கரசர்'' என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரியும்.

''சுவாமி! பக்கத்தில் தான் உள்ளது அப்பூதி அடிகளார் மனை. இவ்வளவு நேரம் இங்கிருந்து விட்டு இப்போது தான் வீட்டிற்குச் சென்றார். வீட்டிற்குச் சென்றால் அப்பூதி அடிகளை நீங்கள் காணலாம்'' என்று தெரிவிக்கிறார்கள்.



திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளாரின் வீட்டிற்கு விரைந்து சென்று வாசலில் நின்று ''அப்பூதி அடிக ளாரின் இல்லம் இதுதானே!'' என்று கேட்கிறார். அப் பூதியடிகளும் சிவனடியார் ஒருவர் தம் இல்லம் வந்து வாசலில் நிற்பதை அறிந்து விரைவாக வந்து,

''முடிவில் தவஞ் செய்தேன் கொல்
முன் பொழியுங் கருணைபுரி
வடிவுடையீர்! எம் மனையில் வந்து அருளிற்று
என்?''

என்று வினவுகிறார்.

''சிவபெருமானைத் திருப்பழனத் திருத்தலத் தில் தரிசித்து வரும்வழியில் தண்ணீர் பந்தல் முதலாக நீங்கள் செய்து வரும் அறங்கள் பலவற்றைக் கண்டும், கேட்டும், அப்படிப்பட்ட அறங்களை நிகழ்த்துகின்ற அருளாளர் ஆகிய தங்களைக் காண வேண்டி வந்தேன்'' என்று திருநாவுக்கரசர் இனிமையாகத் தாம் வந்துற்ற காரணத்தை அப்பூதி அடிகளிடம் கூறுகின்றார்.

''இவ்வளவு அறங்களையும் செய்துவரும் நீங்கள், உங்கள் பெயரில் அவ்வறங்களைச் செய்யாமல் வேறொருவர் பெயரில் செய்ய என்ன காரணம்?'' என்று குற்றமற்ற மனத்தோடே வினவுகின்றார் திருநாவுக் கரசர். ஆனால் அப்பூதியடிகளுக்கோ திருநாவுக்கரசர் என்ற திருப்பெயரை - வேறொரு பேர் என்று சிவனடி யாக இருந்து கொண்டு அப்பெயரின் பெருமையறியாது சாதாரணமாக கூறுகின்றாரே இப்புதிய அடியவர் எனக் கோபம் உண்டாகிவிடுகின்றது.

அற்புதமான இருபெரும் அருளாளர்கள் சந்தித்துக்

கொள்கின்ற ஒரு அற்புதமான காட்சி. இதில் அப்பூதியடிகளாரோ திருநாவுக்கரசரைத் தெய்வமாகவே எண்ணிப் போற்றி வருகின்ற பெருங்குணப் பண்பாளர். அப்பெருங்குணப் பண்பாளர் தாம் தெய்வமாக நித்தமும் போற்றிவரும் திருநாவுக்கரசு சுவாமிகளே இப்பொழுது நேரில் வந்து இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டாரில்லை.

''நீங்கள் பேசுவது நன்றாக இல்லை. திருத்தொண்டின் திருவடிவமாகத் திகழும் ''திருநாவுக்கரசர்'' எனும் பெயரா வேறொரு பேர்?'' என்று திருநாவுக்கரசரிடமே சற்றே கோபமாகக் கேட்டு விடுகிறார் அப்பூதி அடிகளார்.

''செம்மைபுரி திருநாவுக்கரசர் திருப் பெயர் எழுத
வெம்மை மொழி யான்கேட்க விளம்பினீர்''

''நன்றருளிச் செய்திலீர் .... திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர் தந் திருப்பேரோ வெறொரு பேர்?''

''பொங்குகடல் கல்மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை
அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யார் உளரே?
மங்கலமாம் திருவேடத் துடன் நின்று இவ்வகை மொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம் யார்? இயம்பும்''

என்று கோபத்துடன் அப்பூதியடிகள் வினவ அப்பூதியடிகளின் கோபத்தை மேலும் வளர்க்க விரும்பாத திருநாவுக்கரசர் சுவாமிகள், ''பிற துறையில் நின்று ஏற அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்து உய்ந்த, தெருளும் உணர்வு இல்லாத சிறுமையேன் யான்'' என்று தம்மை இன்னாரென உணர்த்திவிடுகின்றார்.

வந்திருக்கும் சிவனடியார் நித்தமும் தாம் பூசிக்கும் திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் என்பதைத் தெரிந்து கொண்ட அப்பூதி அடிகள் தம் தலைக்கு மேல் இருகரங்களையும் தூக்கி வணங்கி, ஆனந்தக் கண்ணீர் வெள்ளமாகப் பொழிய, உரை குழறி உடம்பெல்லாம் உரோமம் புளகாங்கிதம் அடைய தரையின் மீது விழுந்து திருநாவுக்கரசுப் பெருமான் திருவடிகளைத் தலைமேற் சூடிக் கொண்டு விடுகிறார்.

''அற்றவர்கள் அருநிதியம் பெற்றார் போல்'' அப்பூதியடிகள் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தம் மனைவி, மக்கள், சுற்றத்தார் எல்லோரையும் கூவி அழைத்துக் கொண்டு வந்து ''திருநாவுக்கரசர்'' தம் இல்லம் வந்துற்றமையால் பெருமகிழ்வு கொண்டுப் பேரானந்தப் பெருங்களியாட்டம் ஆடுகின்ற அப்பூதி அடிகள், திருநாவுக்கரசு சுவாமிகளைத் தம் இல்லத்திற்குள் அழைத்துச் சென்று அவருடைய திருவடிகளுக்குப் பாதபூசை செய்து, அம்மங்கல நீரும், பூவும் தம் தலைமேல் தெளித்துக் கொண்டு உள்ளம் பூரித்துப் போகின்றார்.

திருநாவுக்கரசர் திருவாளன் திருநீற்றை வழங்க அப்பூதியடிகளும் அனைவரும் பெருவாழ்வு பெற்றோம் என அதனை மகிழ்ந்து சூடிக் கொண்டு பரவசப்படுகிறார்கள்.

திருநாவுக்கரசர் திருப்பெயரால் திருமடம் அமைத்து அடியாரை நாளும் அமுது செய்வித்து மகிழும் அப்பூதி அடிகளார், திருநாவுக்கரசர் தம் இல்லத்தில் இருந்து அமுது செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றார். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'' திருநாவுக்கரசு சுவாமிகளும் அமுது செய்ய இசைகின்றார்.

நாலுவகையான அறுசுவை உண்டியையும், கறியமுதும் காதலுடன் சமைத்து முடிக்கின்றார் அப்பூதியடிகளின் மனைவியார். அப்பூதியடிகள் தம் மூத்த புதல்வர் ''மூத்த திருநாவுக்கரசை'' அழைத்து ''வாழைக் குருத்து அரிந்து வா'' என்று விரைந்து அனுப்ப, அளவில்லாத மகிழ்ச்சியோடு மூத்த திருநாவுக்கரசு வாழைத் தோட்டத்திற்கு வருகின்றான்.

''நல்தாய் தந்தை ஏவ
நானிது செய்யப்பெற றேன்'' என்று
ஒல்லையில் விரைந்து தோட்டத்
துள்புக்கு பெரிய வாழை
மல்லலங் குருத்தை ஈரும்
பொழுதினில் வாளரா ஒன்று
அல்லலுற் றழுங்கிச் சோர
அங்கையில் தீண்டிற் றன்றே'' *(அப்பூதி 25)*

மூத்த திருநாவுக்கரசு இக்காலக் குழந்தைகள் போல் முரண்பிடிக்காமல் ''நல்ல பணியில் என்னை என் நல்ல பெற்றோர்கள் ஈடுபடுத்த, நான் இதைச் செய்ய என்ன புண்ணியம் செய்தேன்?'' என்று துள்ளிக் குதித்து ஓடிப்போய் வாழைக்குருத்தை வாளிப்பானதாகப் பார்த்து அதனைக் கொய்யும் பொழுது விதியின் கொடுமையை என்னென்பது? நச்சரவம் ஒன்று வாழைமரத்தில் மறைந்து இருந்தது, மூத்த திருநாவுக்கரசைத் தீண்டி விடுகின்றது.

''ஆ அம்மா!'' என்று அலறி வலியால் துடித்த போதும் மூத்த திருநாவுக்கரசு ''நம் சுவாமிகள்

அமுது அருந்த என்னால் ஒரு சிறு தாமதமும் நேரிட இசையேன். நாகம் தீண்டியதையும் தெரிவித்திடேன்'' என்று மன உறுதி பூண்டவனாய், வாழைக் குருத் தோடு இடையில் எங்கும் விழுந்து விடாமல் ஓடி வீட்டிற்குள்ளும் வந்து விடுகின்றான்.

திருநாவுக்கரசு சுவாமிகளிடம் அவ்விளங் குருத்தான மூத்த திருநாவுக்கரசு கொண்டிருந்த பெருங்காதலைச் சேக்கிழார் பெருமான்

''.... மாசுணம் கவர்ந்தது யார்க்கும்
அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்கயான்
அறையேன்'' என்று
திருந்திய கருத்தினோடும் செழுமனை சென்று
புக்கான்'' *(அப்பூதி, 26)*

என்று பாடியிருக்கக் காணுகின்றோம்.

பறித்த வாழைக் குருத்தைத் தாயாரிடம் தந்த படியே நஞ்சு தலைக்கேற தரையில் விழுந்து உயிர் விட்டு விடுகிறான் மூத்த திருநாவுக்கரசு.

அருமை மகன் மூத்த திருநாவுக்கரசு அரவு தீண்டி மாண்டுபட்ட அந்நிலையில் அவனுக்காக ஒரு சிறிதும் மனம் துடிக்காத அப்பூதி அடிகளாரும், அவர் மனைவியாரும் ''பசித்திருப்பாரே சுவாமிகள்! அவருக்கு அமுது படைத்து பசியாற்றுவோம்'' என்றே துடிதுடிக்கிறார்களாம்!

''பெறலரும் புதல்வன் தன்னைப்
பாயினுள் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
அறஇது தெரியா வண்ணம்
அமுதுசெய் விப்போம்'' என்று
விறலுடைத் தொண்ட னார்பால்
விருப்பொடு விரைந்து வந்தார்'' *(அப்பூதி. 29)*

பாம்பு கடித்து மாண்டுபோன பாசமகன் மூத்த திருநாவுக்கரசை ஒரு பாயில் சுருட்டி யாரும் அறியாமல் ஓர் அறையினில் மூடி வைத்து திருநாவுக்கரசு சுவாமி களிடம் விரைந்து வந்து ''அமுது செய்து எங்கள் குடி முழுதும் உய்யக் கொள்வீர்'' என்று வேண்டுகின்றார் அப்பூதி அடிகளார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும் நம் திருவடிகளை விளக்கிக் கொண்டு, அமுதுசெய்ய இருக்கையில் அமர்ந்தவர், அமுது செய்வதற்கு முன் திருவைந் தெழுத்து ஓதித் திருநீறு அணியும் தம் வழக்கப்படி தாம் திருநீறு அணிந்து கொண்டவராய், அப்பூதி அடிக ளாருக்கும், அவர்தம் துணைவியாருக்கும் திருநீறு அளித்து அப்பூதி அடிகளாரின் புதல்வர்க்கும் திருநீறு அளிக்க விழைந்து ''மூத்த திருநாவுக்கரசு எங்கே?'' என்று வினவுகிறார்.

''காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும்
முன்னே
மேதகு பூதி சாத்த''

என்று இளைய திருநாவுக்கரசிற்குப் பூதி சாத்திய படியே'' மூத்த திருநாவுக்கரசையும் காட்டுங்கள், மேதகு பூசி சாத்த'' என்று அப்பரடிகள் வினவ - ''இப்போது இங்கு அவன் உதவான்'' என்று கூறு கின்றார் அப்பூதி அடிகள்.

''மூத்த திருநாவுக்கரசு இப்போது இங்கு உதவான்'' என்பதைக் கேட்டுத் திடுக்கிடுகிறார் நம் திருநாவுக்கரசு சுவாமிகள்.

''இவ்வுரை பொறாதென் உள்ளம்? என் செய்தான்? உண்மையைக் கூறுங்கள்'' என்று பதற் றத்துடன் திருநாவுக்கரசு சுவாமிகள் வினவ, இனியும் சுவாமிகளிடம் நிகழ்ந்ததை மறைத்தல் கூடாது என மனம் தெளிந்தவர்களாய் அப்பூதி அடிகளாரும், அவர்தம் துணைவியாரும் ''மூத்த திருநாவுக்கரசு வாழையிலை அரியும்போது அரவம் தீண்டி உயிர் நீங்கி விட்டான்'' என்று கூறுகிறார்கள்.

''மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டி இறந்து பட்டதை அவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொண்டு, தமக்கு அமுது படைக்க எவ்வளவு ஆர்வம் காட்டு கிறார்கள்!'' என்று அப்பூதியடிகளார் குடும்பத்தார் தம்மேல் காட்டும் அளவிலாப் பக்தியைக் கண்டு வியப்படைகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

இறைவன் திருக்கோயில் முன் மூத்த திருநாவுக் கரசுவின் உயிரற்ற உடலைக் கொண்டு வரச்செய்து ஒப்பற்றதான ''ஒன்றுகொலாம்'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளுகின்றார்.

''ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடு வெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே''

எனப் பதிகம் பாடத் தொடங்கி, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது என இறைவன் பெருமைகளை அடுக்கி நம் அப்பரடிகள்

''பத்துக் கொலாம் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக் கொலாம் எயிறுந் நெரிந் துக்கன
பத்துக் கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே''

என்று பதிகத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் நிறைவு செய்ய அரவின் விடம் நீங்க, மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்று எழுந்து விடுகின்றான்.

மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்றெழுந்த இவ் வதிசயத்தைச் சேக்கிழார் பெருமான்

''அன்றவர்கள் மறைத்தனுக்கு அளவிறந்த
கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தம் கோயிலின்முன்
கொணர்வித்தே
''ஒன்றுகொலாம்'' எனப் பதிகம் எடுத்துடையான்
சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளை உணார்ந்
தெழுந்திருந்தான்''

(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் 208)

எனப் பாடுகின்றார்.

உறக்கத்திலிருந்து எழுவது போன்று மூத்த திருநாவுக்கரசு உயிர்பெற்று எழும் அற்புதம் நிகழ்ந்து விடுகின்றது. மகன் உயிர்பெற்று எழுந்ததைக் கண்டும் கூட மகிழ்ச்சி கொள்ளவில்லை அப்பூதி அடிகளாரும், அவர்தம் துணைவியாரும். ''நம் சுவாமிகள் திருவமுது செய்தற்குச் சிறிது இடையூறு செய்துவிட்டானே!'' என்று மகனால் ஏற்பட்ட தாமதம் எண்ணியே மனம் கலங்கினார்கள் என்று சேக்கிழார் கூறும் பாடல் இது திருநாவுக்கரசு சுவாமிகளின் பால் அவர்கள் கொண்டு இருந்த அளவிறந்த காதலைக் காட்டுகின்றது.

''பிரிவுறும் ஆவி பெற்ற
பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்
நின்றஅப் பயந்தார் தாங்கள்
அறிவரும் பெருமை அன்பர்
அமுதுசெய்து அருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான்
இவன் என்று சிந்தை நொந்தார்''

(அப்பூதி அடிகள். 37)

அப்பரடிகள் அமுதுண்ணக் காலம் தாழ்த்தி யதே என வருந்தி மீண்டும் அமுது வகைகளைத் தயாரித்து அப்பருக்குப் படைக்க அப்பூதியடிகள் மற்றும் அவர்தம் பிள்ளைகளோடு அமர்ந்து அமுது செய்து மகிழ்வதாக அப்பர் அருள் வரலாற்றினை நிறைவு செய்கின்றார் சேக்கிழார் பெருமான்.

''இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும்
நாளும்
அவ்வருந் தவர் பொற்றாளே என உணார்ந்து
அடைவார் செல்லும்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள்
ஆடும்
நவ்வியங் கண்ணான் பங்கா நற்கழல் நண்ணி
னாரே''

(அப்பூதி. 44)

அப்பூதியடிகள் இறைவன் திருவடிநீழல் நண்ணிய நன்னாள் தை மாதம் சதயநாள் ஆகும். திங்களூரி லிருந்து திருப்பழனம் சென்று அங்கு இறைவனை வணங்கிப் பாடும்போதும் அப்பூதியடிகளின் அன்பை மறவாத நம் திருநாவுக்கரசு சுவாமிகள் ''கலிமெலிய அழல்ஓம்பும் அப்பூதி'' என்று பாடியிருக்கும் சிறப்பை யும் சுட்டிக் காட்டிப் போற்றுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''அப்பூதி அடிகளார்தம் அடிமையைச் சிறப்பித்து
ஆன்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்பு
''சொன்மாலை'' வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால்
என்றும்
செப்பூதி யம்கைக் கொண்டார் திருநாவுக் கரசர்
பாதம்''

(அப்பூதி 43)

சேக்கிழார் சுவாமிகளைப் போலவே சிவப்பிர காச சுவாமிகளும் ''நால்வர் நான்மணிமாலை''யில் ''தீயினில் நின்று அப்பூதியடிகள் தவம் செய்தவர் அல்லர், திருநாவுக்கரசு எனும் ஓர் திருநாமத்தை எழுதி யும், கூறியுமே வீடுபேறு பெற்றுவிட்டார்'' என அப்பூதி யடிகளை வியக்கின்ற அருமையைக் காணுகின்றோம்.

''உற்றான் அலன் தவம் தீயினின்றான் அலன்
ஊண் புனலா
அற்றான் அலன் நுகர்வும் திருநாவுக் கரசு எனும்
ஓர்
சொற்றான் எழுதியும் கூறியுமே என்றும் துன்
பில்பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும்
பெருந்தகையே''

(நால்வர் நான்மணிமாலை 38)

திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநாமம் தமக்கு எல்லாம் தரும் என்று உறுதியாக நம்பி. அவ்வாறே பெற்ற அப்பூதியடிகளின் அருள் வரலாறு, ''நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு'' என்பதை நமக்கு உறுதி செய்கின்றது.

***

# திருமந்திர உபதேசம்

"திருமந்திரச் செம்மல்" திருமிகு T.V. வெங்கட்ராமன் இ.ஆ.ப.

சிவனடியார்கள் சிவப் பரம்பொருளின் திருவடி நிழலை நாடிக், கண்டு, அடைந்து திருவருளும் மெய்ஞ் ஞானமும் ஆகிய பேற்றினில் தங்களை இருத்திக் கொண்டு அங்கே பெறும் பேரானந்தத்தை நம்மோடு பகிர்ந்து கொள்ள விரும்பித் தம் உள்ளத்திலிருந்து வெளிவரும் உணர்வுகளைப் பாடல்களாகவும், தத்து வங்களாகவும் அணிச் செய்கின்றார்கள்.

இவற்றையே தோத்திரங்கள் என்றும் சாத்திரங்கள் என்றும் சான்றோர்கள் போற்றுகின்றார்கள். ஆகவே உள்ளத்து அனுபவம் பாடல்களாகவும், தத்துவங்களா கவும் வெளி வந்தாலும் அவை அருளாளர்களின் உள்ளங்களிலே ஒரு சேர அமைந்து இறைவனுடைய திருவாக்கோடு கலந்து, வெவ்வேறு வகைப்பட்ட அறிவுநிலை உள்ள மக்களுக்கு அவ்வவ்வாறு அறிவிக் கப்பட வேண்டும் என்கின்ற இறைவனுடைய நியதிப் படியே அமைகின்றன.

தோத்திரங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றின் குறிக்கோள் ஒன்றே. இறைவனை அடையும் நெறியை அவைகள் பலவகைகளிலே எடுத்துக்காட்டினாலும், அந்த நெறிகள் எல்லாம் உயிர்களுக்குப் பன்மையில் ஒருமை என்கிற முடிவினையே சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வகையில் சிவனடியார்கள் உலகுக்குத் தந்த தோத்திரப் பாடல்களை சைவப் பெருமக்கள் சார்ந்த நல்லுலகம் பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்து வழங்கியுள்ளது.

அருளாளர்கள் தங்களுடைய பாடல்களால் இறை வனுடைய பெருமையை உணர்த்தினார்கள். உரை, உணர்வு, இறந்து நின்ற நிலையிலிருந்து தங்களது உள்ளக் கிடக்கைகளை எல்லாம் பாடல்களாக ஆக்கித் தந்தார்கள்.

இப்பன்னிரு திருமுறைகளிலே பத்தாம் திருமுறை யாக திருமூலர் பெருமான் அருளிச் செய்த திருமந்திரம் சைவப் பெருமக்களால் போற்றி வழங்கப்படு கின்றது.

எட்டும், இரண்டும் பத்து என்பது ஒரு கணக்கா கும். தமிழில் எட்டு என்ற எண்ணைக் குறிக்கும் எழுத்து ''அ'' ஆகும். 2 என்ற எண்ணைக் குறிக்கும் எழுத்து 'உ' ஆகும். 'அ'வையும் 'உ'வையும் மகரத்தோடு சேர்த்தால் 'ஓம்' என்கிற பிரணவமாகிய மூலநாதம் உணர்த்தப் படும்.

'அ' என்னும் எழுத்து 'சி' என்ற எழுத்தையும் குறிக்கும். 'உ' என்ற எழுத்து 'வ' என்ற எழுத்தையும் குறிக்கும்.

எட்டும் இரண்டும் 'பத்து' என்கிற நிலையில், 'பத்து' என்ற தானத்தில் உள்ளது 'ய' என்கிற எழுத்து.

ஆகவே 'ஓம்' என்கிற பிரணவம் 'சிவய' என்கிற ஐந்தெழுத்து மந்திரத்தையும் எடுத்துக்காட்டும்.


பிரணவமும், ஐந்தெழுத்து மந்திரமும் ஒன்றே என் பது சான்றோர்களுடைய நிலை ஆகும்.

இன்ன வகையில் பத்தாம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ள திருமந்திரம் பிரணவம், ஐந்தெழுத்து மந்திரம் ஆகியவற்றைத் தன்னுள் கொண்டுள்ள சிவப் பரம்பொருளை விளக்கியும், அதனை அடையும் நெறியைக் குறிப்பிட்டும் ஒரு சாத்திர நூலாகவும் அமைந்திருக்கின்றது என்பது சிந்திக்கத்தக்கது.

பன்னிரு திருமுறைகளும் சைவ சமயத்தின் தோத்திரப் பகுதி என்கிற அளவில் திருமந்திரமும் நெஞ்சை அள்ளும் பல தோத்திரங்களைத் தன்னுள் கொண்டுள்ளது என்பது சான்றோர்கள் அறிந்த உண்மை ஆகும்.

''ஆரறிவார் எங்கள் அண்ணலின் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்பு கின்றேனே''

என்பது ஒரு சிறந்த தோத்திரப் பாடல்.



''தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே''.

இதுவும் ஒரு சிறந்த தோத்திரப் பாடல் ஆகும்.

திருமந்திர மாலையில் இவை போன்ற தோத்திரப் பாடல்கள் அநேகம் உள்ளன.

திருமந்திரத்தைத் தமது தத்துவ நூலாகக் கொண்ட வள்ளலார் பெருமான் தோத்திரத்திற்குத் திருவாசகம் என்றும், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்றும் போற்றி உரைத்துள்ளார்.

சைவ சாத்திரங்கள் என்று எல்லோராலும் வணங்கப்படும் மெய்கண்ட சாத்திரங்கள் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வந்த படைப்புகள் ஆயினும் ''சிவ பரத்துவம்'', ''சைவ சித்தாந்த பொருள் உண்மை'', ''சிவபெருமானை அடையும் நெறிகள்'', ''சிவானந்த அனுபவம்'' ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துக்களைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ''திருமந்திரம்'' ஆழமாகப் புகுந்து விளக்கியுள்ளது என்ற காரணத்தினால் சைவ சாத்திரங்களுக்கு திருமந்திரம் மூலமாக அமைந்துள்ளது என்று சான்றோர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார்கள்.

''பன்னிரு திருமுறை வரலாறு'' நூலை எழுதியுள்ள பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் வெள்ளை வாரணர் அவர்கள் இக்கருத்தினை வலியுறுத்தி ''திருமந்திரமும் மெய்கண்ட சாத்திரங்களும்'' நெருங்கிய நிலையில் இருப்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

''சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே''

என்கிற பாடல் சிவபரத்துவத்தை நன்கு விளக்குகின்றது.

திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் முழுவதிலும் பின்னர் மலர்ந்த சைவ சித்தாந்தக் கொள்கைகள் சிறப்பாக எடுத்து வைக்கப்பெற்றுள்ளன.

சைவம் சிவத்தோடு சம்பந்தம் ஆனது என்கிற

அடிப்படைக் கொள்கையை முதன் முறையாக உலகிற்குத் தந்தவர் திருமூலர் பெருமான் என்றே கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் சித்தாந்த நூல்களிலிருந்து மேலும் தெரிந்து கொள்ளலாம்.

திருக்கயிலாயத்தில் வாழ்ந்த காலத்தில் திருமூலப் பெருமான் வேதங்களையும், ஆகமங்களையும் நன்கு கற்றவர். திருமந்திரத்தில் பாயிரப் பகுதியில் வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு என்ற தலைப்புகளில் வரும் மந்திரங்களே இதற்குச் சான்றுகள் ஆவன.

வேதங்கள் நான்கு, சைவ ஆகமங்கள் 28. வேதங்களிலே பல உப அங்கங்களும், ஆகமங்களிலே பல உப அங்கங்களும் காணப்படுகின்றன.

வேதங்கள் பல தெய்வங்களைப் போற்றுவதாகக் காணப்பட்டாலும், ஒரு முழு முதற் கடவுளையே அவை சுட்டிக்காட்டுகின்றன.

சிவப் பரம்பொருளே அம் முழுமுதற் கடவுள் என்று 28 சிவாகமங்களும் தெரிவிக்கின்றன.

வேதங்களில் இருப்பதைப் போல ஆகமங்களிலும் கரும காண்டம், உபாசனை காண்டம், ஞான காண்டம் என்ற பகுதிகளும் உள்ளன.

வேதங்கள் இறைவனை அடையும் நெறியாக வேள்விகள் சடங்குகள் போன்றவற்றை நடத்துதலை முதன்மையாக வைத்துப் பேசுகின்றன. ஆனால் அவற்றின் முடிவாக வந்த உபநிடதங்கள் பரம் பொருளை உள்நின்று அனுபவிக்க வேண்டும் என்கிற நெறியை வலியுறுத்துகின்றன.

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினை பொதுவாக எடுத்துச் சொல்லித் தன்னுள் இருக்கும் இறைவனை அடைய முற்படுவதே சாதகனுடைய குறிக்கோள் ஆகும் என்றும் உபநிடதங்கள் பேசுகின்றன.

பொதுவாக இறைவனைப் பற்றிய அறிவினைத் தருவது வேதங்கள். ஆனால் அந்த அறிவின் வழியே மட்டும் சென்று இறைவனை அடைய இயலாது என்பது சான்றோர்கள் கண்ட உண்மை ஆகும்.

இந்தச் சூழ்நிலையில்தான் சிவாகமங்கள் சாதகனுக்குத் துணைபுரிய முன்வருகின்றன.

இறைவனை அடைய தீவிர நாட்டம் கொண்டுள்ள ஒவ்வொரு உயிரும் அதனுடைய பக்குவத்திற்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களை விரிவாக எடுத்துச் சொல்லி அவற்றின் வழி சென்றால் எத்தகைய அனுபவங்களைப் பெறலாம் என்றும் எடுத்துக் கூறுகின்றன.

எனவே வேதங்கள் பொது என்றும், ஆகமங்கள் சிறப்பு என்றும் முதன் முறையாக உலகிற்குத் திருமூலர் பெருமான் எடுத்துரைத்தார். இவை இரண்டுமே இறைவன் உலகிற்குத் தந்த பரிசாகும்.

இவற்றிலே வேறுபாடுகளைக் காண்பது என்பது அறியாமை ஆகும். இவை இரண்டுமே ஒரே குறிக்கோளைக் கொண்ட அருளாளர்களுடைய வெளிப்பாடுகள்.

ஆகமங்களையும், வேதங்களையும் இவ்வாறு ஒரு கண்ணோட்டத்தில் முதன் முறையாகப் பார்த்த பெருமை திருமூலரையே சாரும்.

''வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பும்என் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம் அதென்பர் பெரியோர்க்கு அபேதமே''

இத்தன்மையிலேயே திருமூலர் பெருமான் வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் ஒருமுகமாகப் பார்க்கின்றார்.

வேதங்களின் அந்தம் எனச் சொல்லப்படும் வேதாந்தம், பிரமம் என்கிற பரம்பொருளுக்கும், ஆன்மா என்கிற உயிருக்கும் உள்ள உறவைப் பலவகைகளிலே ஆய்வு செய்து சில அடிப்படை உண்மைகளை எடுத்து வைக்கின்றது.

இவற்றை மகாவாக்கியங்கள் என்று சான்றோர்கள் கூறுவர். இம் மகாவாக்கியங்கள் பின்வருவன:

1. பிரக்யானம் பிரம்மா - ரிக் வேதத்தில் ஐத்ரேய உபநிடதத்தில் வருகிறது.

2. அகம் பிரம்மாஸ்மி - யஜுர் வேதத்தில் பிருகதாரண்ய உபநிடதத்தில் வருகிறது.

3. தத்துவமசி - சாம வேதத்தில் சாந்தோக்ய உபநிடதத்தில் வருகிறது.

4. அயம் ஆத்மாபிரம்மா - அதர்வண வேதத்தில் மண்டுக்ய உபநிடதத்தில் வருகிறது.

இந்த மகாவாக்கியங்களைத்தான் பிற்காலத்தில் ஆதிசங்கரரும், இராமாநுசரும், மாத்வரும் தங்களுடைய கொள்கைகளுக்கு அடிப்படையாக வைத்துக் கொண்டார்கள்.

பிரம்மமும் உயிரும் ஒன்றே. இருபொருள் இல்லை என்பது ஒரு வாதம்.

பிரம்மமும் உயிரும் விசேசமான உறவு நிலையில் அமைந்திருக்கின்றன என்பது இரண்டாவது வாதம்.

பிரம்மம் வேறு, உயிர் வேறு என்பது மூன்றாவது வாதம்.

திருமூலர் பெருமான் சைவத் துறையின் அடிப்படை நிலையான முப்பொருள் உண்மையைத் தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

பதி ஆகிய இறைவனும், பசு ஆகிய உயிரும், பாசம் ஆகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களும் தனித்தனிப் பொருள்கள். இறைவனைப் போலவே அவைகளும் அநாதியானவை.

உயிரானது திருவருள் துணையோடு மலங்களை நீக்கிக் கொள்கின்றது. இறைவனுடைய திருவருள் முழுமையாகப் பெற்று உயிர் தன்னுடைய மூலமலமான ஆணவத்தைத் தேய்த்துக் கொள்கின்றது.

செம்பிற் களிம்புபோல உயிரோடு தொன்று தொட்டு சேர்ந்திருக்கும் ஆணவம் ஆகிய மலம், உயிரினுடைய பக்குவத்தாலும், இறைவனுடைய துணையோடும் தனது ஆற்றலை இழக்கின்றது.

இந்த உண்மையைத் திருமூலர் பெருமான்

''பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே''

என்ற பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

ஆகவே இறைவனும், உயிரும் ஒன்று என்ற வாதம் சரி ஆகாது. உயிர் தன்னுடைய மலங்களைப் போக்கிக் கொண்டு சிவமாம் தன்மையைப் பெற்று சிவபெருமானுடைய திருவடிகளைச் சார்ந்து நிற்கும்.

பதியும், உயிரும் அறிவுப் பொருள்கள். அறிவு நிலையில் இரண்டும் இணையத் தக்கவை. அந்த இணைப்பு ஏற்படும்பொழுது ஒரு அத்துவிதக் கலப்பு ஏற்படுகின்றது. இதுவே முடிவான நிலைமை.

சிவமும் உயிரும் ஒருபொருள் அல்ல. இரண்டும் ஒன்று சேரும் தன்மை உடையவை. இங்கே உயிர் அனுபவிப்பது இருமையில் ஒருமை ஆகிய நிலை.

இதைத் திருமூலர் பெருமான் தெளிவாக எடுத்துக் கூறி, சீவன் சிவன் ஆகும் நிலையே அத்துவிதக் கலப்பு நிலை என்பார்.

தத்துவம், அசி என்பதற்குப் பதிலாக துவம், தத்து, அசி என்று சொற்றொடர்களைக் கொண்டு உயிர் சிவனாகும் தன்மை பெறுவதுதான் அதனுடைய குறிக்கோள் ஆகும்.

இதைத்தான் வேதாந்தமும், சித்தாந்தமும் எடுத்துக் கூறுகின்றன.

வேதாந்தம் பொது உண்மையைச் சொல்லுகின்றது. சித்தாந்தம் இதற்கான சிறப்பு வழிகளை எடுத்துக்கூறுகின்றது என்று திருமூலர் பெருமான் பல பாடல்களில் விளக்கி அந்த அடிப்படையில் வேதாந்தமும், சித்தாந்தமும் ஒரு தன்மை உடையவை என்று முடிவாகச் சொல்லுவார்.

''தானான வேதாந்தம் தானென்னும் சித்தாந்தம்
ஆனாத் துரியத்து அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற்று அருஞ்சித்தி ஆதலே''

இந்தப் பாடலிலே வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவற்றை ஒன்றாகக் காணும் திருமூலர் பெருமான் உயிரானது தனது தூய்மையான நிலையிலே தன்னை உணர்ந்து சிவயோகத்தில் நின்று, மலங்கள் யாவும் தேய்வுற்ற நிலையில் சிவப் பரம்பொருளோடு இணைந்து நிற்பதே சித்தி ஆகும் என்று கூறுகிறார்.

எனவே வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவற்றின் முடிவு ஒன்றே என்பதை முதல் முறையாக திருமூலர் பெருமான் திருமந்திரத்தில் விளக்கியிருப்பது சிந்தித்து மகிழத்தக்கது ஆகும்.

(தொடரும்)

★★★

# நவராத்திரியின் சிறப்பு

— முனைவர் த. அமிர்தலிங்கம்

## முன்னுரை

சக்தி வழிபாடு, மிகத் தொன்னெடுங்காலம் முதலே நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சாதாரோ என்னும் இடத்தில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், அம்பிகை ஆகிய உலக அன்னையின் மண்சிலைகள் பலவும்கூட உள்ளன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்துவெளி நாகரிக காலம் ஏறத்தாழ கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின், சக்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமையுடையது என்பது தெளிவாம்.

சிந்துவெளிப் பகுதியிற் கிடைத்த அம்பிகையின் சிலைகளைப் போலவே, பாரசீகம், ஏஜியன், ஏலம், மெசபட்டோமியா, டிரான்ஸ்காஸ்பியா, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரீட், பால்கன், எகிப்து முதலிய பல்வேறு நாடுகளிற் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் தொன்று தொட்டே பரவியிருத்தல் வேண்டும் என்று, சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர் ஆராய்ந்து கூறுகின்றார்.

## சக்தி வழிபாடு

சிலர் கடவுட் பெரும் பொருளை 'அது' என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினால் கடவுள் அஃறிணைப் பொருள் என முடியும். 'அவன்' என்றாலோ, கடவுள் ஆணாக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப்படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் ''அவன் அவள் அது'' என மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறைநிலையை 'அவள்' எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும்.

## சமுதாய வாழ்வு

கடவுள் பெரும் பொருளைப் பெண்ணாக, பெண் வடிவத்தில் வைத்துப் போற்றுதலையே, நாம் சக்தி வழிபாடு என்கின்றோம். சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பண்டைக் காலம் முதலே இந்தியப் பெண்மணிகள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். தாயாகவும், மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், உலகியல் வாழ்விற் பெண்கள் பல்வேறு நிலைகளிற் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகின்றனர். ஒரு பெண்ணின் சிறப்பும் கடமையும் பொறுப்பும், குடும்ப வாழ்விற் படிப்படியே வளர்ந்தோங்குகின்றன.

பெண்மை நலங்கள் அனைத்தும் தாய்மை நிலையிலேயே சிறந்தோங்கி ஒளிவீசித் திகழ்கின்றன. அன்பும் அருளும் பரிவும் இரக்கமும் தூய்மையும் மென்மையும் தியாகமும் ஆகிய சிறந்த தெய்விகப் பண்புகள் அனைத்தும் தாயிடமே ஒருங்கே அமைந்து நிலவுகின்றன. தாய்மையின் சிறப்பனைத்தும் தகவுணர்ந்தே, நம் முன்னைச் சான்றோர்கள் கடவுளை தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புக்களையெல்லாம் இனிது உணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, சக்தி வழிபாடு எனலாம்.

## தாயின் பிரிவு

சக்தியை உலகுயிர்களுக்குத் தாயாகச் சமய நூல்கள் போற்றுகின்றன. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவு காட்டி நலஞ் செய்கின்றாள். அவ்வாறே சக்தியாகிய தேவியும் உலகுயிர்கள் இயற்றும் பிழைகளையெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றாள்.

தந்தை தன் பிள்ளைகள்பாற் சினங்கொள்ள நேர்ந்தவழி, தாய் பிள்ளைகளின் சார்பிற் பரிந்துரையாடித் தந்தையின் சினத்தைப் போக்கி நன்மை புரிகின்றாள்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை  
மீதுன் அருகிருந்து,  
நீமுத்தம் தாஎன்றவர் கொஞ்சும்  
வேளையில், நித்தநித்தம்  
வேய்முத்த ரோடென் குறைகள்  
எல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்,  
வாய்முத்தம் சிந்தி விடுமோ?  
நெல்வேலி வடிவம்மையே!

எனக் கவிஞர் ஒருவர் கவினுறப் பாடுவதுபோல, இறைவனாகிய தந்தை உலகுயிர்கள் ஆகிய மக்கள் செய்யும் தீவினைகளுக்காகச் சினங்கொண்டு ஒறுத் தொழிக்காதபடி, தாயாகிய அம்பிகையே தன் பெருங் கருணையாற் பரிந்துரை கூறித் தடுத்துக் காப்பாற்றி யருள்கின்றாள்.

### தென்னகத்தின் பண்பாடு

உலகுயிர்களின் உய்தி கருதி, இறைவனின் திரு வருள் செயற்படும் இவ்வியல்பினைத் தாயின் தண்ண ளியோடு ஒப்பிட்டு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களிற் சிறப்புறப் பாடிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

சிவபிரானுக்கு உமையம்மையும், திருமாலுக்குத் திருமகளையும், சக்தியாக வைத்துத் தாய்மை தெய் வத்தைப் போற்றும் வழிபாட்டு முறை, முதன் முதலில் தென்னிந்தியாவிலேயே தோன்றியதென்றும், இது தென்னகத்தின் சிறப்பியற் பண்பாடு என்றும், ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. சுநீதி குமார சாட்டர்ஜி அவர்கள் குறிப்பிடுதல், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறு தற்குரியது.

### இளங்கோவடிகள்

தமிழ் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சக்தி அல்லது தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வந்தது. பாலைத் திணைக்குரிய தெய்வமாகத் துர்க்கை (கொற்றவை) போற்றப்பெற்றாள். சிலப்பதி காரத்தில் ''வேட்டுவவரி'' என்னும் பகுதியில், இளங் கோவடிகள் சக்தி வழிபாட்டின் இயல்பையும், அதன் சிறப்பையும் அழகுறப் பாடியருளியுள்ளார். சக்தி வழி பாடு சிவ வழிபாட்டோடு தொடர்புடையதாகலின், சிவ பெருமானுக்குரிய நெற்றிக்கண் நீலகண்டம் - மேரு மலையாகிய வில்லை வளைத்தல் - சூலம் ஏந்து தல் - யானையின் தோல் போர்த்தல் முதலிய பண்பு களை அம்பிகைக்கும் உரியனவாக வைத்து,

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டம்'
'நஞ்சுண்டு கறுத்த கண்டி'
'அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்'
'வளையுடைக் கையிற் சூலம் ஏந்தி'
'கரியின் உரிவை போர்த்த அணங்கு'

என்றெல்லாம் இளங்கோவடிகள் சக்தியைக் குறித்துப் பாடுகின்றார். மேலும் 'அமரி-குமரி-கவுரி-சமரி- சூலி-நீலி-மாலவற்கு இளங்கிளை (தங்கை) ஐயை-செய்யவள்-வெய்யாள் - தடக்கைப் பாய்கலைப் பாவை-பைங்கொடிப்பாவை-ஆய்கலைப்பாவை - அருங் கலைப் பாவை - தமர்தொழ வந்த குமரி' என்றும், பல வகைகளில் தேவியின் சிறப்பைச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.



### சிலப்பதிகாரம்

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஆகிய சிலப்பதி காரம் என்னும் சிறந்த பெருநூலில், சக்தி வழிபாடு பற்றிய பலதிறக் குறிப்புக்கள் அமைந்திருக்கக் காண் கின்றோம். கூடல் மாநகரிற் கோவலன் கொலையுண்டு மடிகின்றாள். கணவன் கொலையுண்ட செய்தி அறிந்த கண்ணகி பெரிதும் வருந்துகின்றாள். பாண்டிய வேந்த னைக் கண்டு, தன் கணவன் 'கள்வன் அல்லன்' என்று மறுத்துரைத்துத் தெளிவுறுத்த விரும்புகின்றாள். பாண்டியனின் அரண்மனை நோக்கிச் செல்கின்றாள். அங்கிருந்த வாயில் காவலனை விளித்து, அரசனுக்குத் தன் வருகை பற்றி அறிவிக்குமாறு பணிக்கின்றாள். அவள் அவளது தோற்றமும் சீற்றமும் கண்டு அஞ்சி நடுங்கி ஓடோடிச் சென்று, அரசனுக்குக் கண்ணகியின் வருகை பற்றித் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

''அடாத்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்!
அறுவர்க்கு இளைய நங்கை! இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு! சூருடைக்
கானகம் உகந்த காளி! தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!
செற்றனள் போலும் செயித்தனள் போலும்!''

என வரும் வரிகளால், சக்தியின் வெவ்வேறு திறக் கூறுகள் ஆகிய கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை என்பன சிலப்பதிகாரத்தில் குறிப் பிடப் பெற்றிருத்தல் காணலாம்.

### நவராத்திரி

நவராத்திரி என்பது, சக்தி வழிபாடு குறித்துச் சிறப்புறக் கொண்டாடப் பெறும் விழாவாகும்.

ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதத்தில், வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை, ஒன்பது நாட்கள் கொண் டாடப்படுதலினால், இது நவராத்திரி என வழங்கப் பெறும். பத்தாம் நாள் ஆகிய விஜயதசமியையும் விழா நாளாகச் சேர்த்து கணக்கிட்டுத் தசரா என்றும், இவ் விழாவைக் குறிப்பிடுவது உண்டு. உலகத்தைத் துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்னும் கொடிய அரக்கனை எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டு, தசமி ஆகிய பத்தாம் நாளில், அம்பிகை அவனை அழித்து வெற்றி கொண்டனள் ஆதலின், அந்நாளை விஜயதசமி எனச் சிறப்பித்து வழங்குவர். மகிஷா சுரனை வென்று கொன்ற அம்பிகையினைத் துர்க்கை என்றும், கொற்றவை என்றும் நூல்கள் புகழ்ந்துகூறும்.

சிலப்பதிகாரத்தில் 'வேட்டுவ வரி' என்னும் பகுதியில், மகிஷாசுரன் என்னும் எருமைத் தலை அரக்கனை அழித்து, வெற்றி கொண்ட கொற்றவை ஆகிய துர்க்கையினைப் பற்றிய பல குறிப்புகளும் பாடல்களும் காணப்படுகின்றன.

### மகிஷாசுர மர்த்தனி

துர்க்கை என்னும் கொற்றவையானவள், தனது கணவராகிய சிவபெருமானைப் போல, ஆனைத் தோலைப் போர்த்திக் கொண்டும், புலியின் தோலை உடையாக அணிந்து கொண்டும், மகிஷாசுரன் ஆகிய எருமை அரக்கனின் தலையினை மிதித்துக் கொண்டு, தேவர்கள் எல்லாரும் வணங்கும்படி, மறை நூல் களுக்கெல்லாமும் மறை பொருளாகி, ஞானக்கொழுந் தாகக் காட்சி தருகின்றாள்.

ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்!
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

வளையல்களை அணிந்த கையில் வாளை ஏந்திக் கொண்டு, வலிமை மிக்க மகிஷாசுரனை அடக்கி வென்று, கலைமானை ஊர்தியாக ஏற்று, மும்மூர்த்திக ளும் தங்கள் இதய கமலத்தில் தியானித்து வணங்கி வழிபடும் அருட்பெருஞ்சோதி விளக்காக, அம்பிகை விளங்குகின்றாள்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்!
அரியரன்பூ மேலோன் அகிமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்!

திருமாலுக்குரிய சங்கினையும் சக்கரத்தையும் தாமரை மலர் போன்ற திருக்கைகளிலே ஏந்திக் கொண்டு, சிவந்த கண்களையுடைய சிங்கம் ஆகிய ஊர்தியின்மீது, கங்காதரனும் நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில், அர்த்தநாரீசு வரியாகத் தேவி அருங்காட்சி வழங்கியருள்கின்றாள்.

சங்கமும் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்!
கங்கை முடியணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்!

*- சிலப்பதிகாரம்*

### முடிவுரை:

இவ்வாறு எல்லாம் தேவி வழிபாடு, தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே சிறப்புற நிகழ்ந்து வந் தமை தெளியலாம்.

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம்தரும்; பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

என அபிராமிபட்டர், தமது அபிராமி அந்தாதி என்னும் நூலில் பாடியருளியவாறு போல, உலக அன்னை யாகிய பராசக்தியை பரவி எல்லா நலங்களையும் பெற்று உய்யலாம் என்பது திண்ணம். நவராத்திரி விழா நிகழும் நாட்களில், நாமனைவரும் அம்பிகை யைப் போற்றி, அவள் அருளைப் பெற்று நலமுற வாழ முயலுவோமாக!

★★★

**பதினான்கு உலகங்களையும் படைத்தவன் சக்தி**

*பூத்தவளே! புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே!*

*- அபிராமி அந்தாதி*

# தீபாவளி

— நடராஜதாசன்

பழைய காலத்தில் ஒரு நீதிபதியிடம் ஒரு வழக்கு வந்தது. ''உமது தாயார் எம் வீட்டிலிருந்து காயைப் பறித்தாள்'' என்பது புகார். அடுத்த வீட்டு மரத்தில் தன் அன்னை காயைப் பறித்தாள் என்பதை அறிந்து அந்த நேர்மையான நீதிபதி, தன் தாயை தண்டிக்கும் முறையில் ஐந்து ரூபாய் அபராதம் போட்டு, மேடையை விட்டுக் கீழிறங்கி, அந்த அபராதத்தைக் கட்டுவதற்குத் தன் அன்னைக்குப் பணம் கொடுத்தார் என்று ஒரு வரலாறு உண்டு. பெற்ற தாயானாலும் மகனானாலும் நீதி யாவருக்கும் ஒன்றே என்பது இந்நாட்டு தருமம். அது கண்ணன் காட்டிய வழி.


இறைவனான திருமால் வராகவதாரம் எடுத்த காலத்து அவரது அழகில் ஈடுபட்ட பூமாதேவி திருமாலை நாயகனாக அடைந்தாள். அவள் வயிற்றில் பிறந்தவனே நரகாசுரன். இரக்கமே இல்லாத அரக்கனை மகனாகப் பெற்ற பூமி தேவி கலங்கினாள். தவறுள்ளவர்களை அழிப்பது தமது நாயகனான திருமாலின் வழக்கம் என்பதை பூமிதேவி அறிந்தபடியால் ''எவ்வளவு கொடியவனாயினும் அவன் என் மகனாயிற்றே. அவனது அழிவை நாம் எப்படித் தாங்குவோம்'' என்ற தாயுள்ளத்தின் ஏக்கம் அவளைத் தடுமாற வைத்தது. ''உன் அனுமதியின்றியோ, நீ இல்லாதபோதோ, நரகனை அழிக்கமாட்டேன்'' என்று திருமால் வாக்குக் கொடுத்தார்.

பூமிதேவி, திருமால் கண்ணனாக அவதரித்த போது, சத்தியபாமை என்ற பெயருடன் தோன்றிக் கண்ணனை மணந்து கொண்டாள். ஒரு நாள் கண்ணனிடம் இந்திரன் வந்து ''பெருமானே! நரகாசுரன் என்பவன் என் அன்னையின் காது குண்டலங்களையும், எனது தோழனான வருணனின் குடை, கொடி முதலானவற்றையும் கவர்ந்து சென்றான்'' என முறையிட இறைவனான கண்ணன் கருட வாகனத்தில் தன் அருமைத் தேவியான சத்திய பாமையுடன் ஏறி நரகாசுரன் வசித்துக்கொண்டு இருந்த ப்ராக்ஜோதிஷபுரத்தையடைந்து அந்த ஊரையும் அங்குள்ள சேனைகளையும் அழித்து தன் அருமை மனைவியான பூமிதேவியின் அம்சமான சத்யபாமையின் எதிரிலேயே நரகாசுரனைக் கொன்றார். பூமிதேவியும் நேரில் வந்து கண்ணனை வணங்கித் தன் மகனான நரகாசுரனுக்கு நற்கதியளிக்கும்படி பிரார்த்தனை செய்து கொண்டாள். நரகாசுரனின் அழிவு பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்வளவே வ்ரலாறு காணப்படுகிறது.

நம் நாட்டில் ஏதாவது நல்ல காரியம் நடந்தால் அதை மக்கள் புதிய ஆடைகள் அணிந்தும், அன்று எண்ணெய் தேய்த்து நீராடியும், பூ தானம் கோ தானம் முதலானவை செய்தும் கொண்டாடுவது வழக்கம். சீதா பிராட்டிக்கு லவன் குசன் என்ற மக்கள் காட்டிலே வான்மீகியின் ஆச்சிரமத்திலே பிறந்தபோது, வேறொரு காரியமாக சத்ருக்கன் காட்டில் சென்று அங்கு குழந்தைகள் பிறந்த செய்தி கேட்டு ''ஆகா! இக்குழந்தைகள் அயோத்தியில் பிறந்திருந்தால், அயோத்தி மக்கள் பூதானம் கோ தானம் முதலானவற்றை நிறையச் செய்து மேளதாள ஓசைகளுடன், நாட்டினர் அனைவரும் எண்ணெய் நீராடி எவ்வளவு மகிழ்ச்சியாகக் கொண்டாடி யிருப்பார்கள்'' என ஏங்கி எண்ணினான் என்கிறது உத்தரகாண்டம்.

''பொய்யாத வேதியர்க்கு பூதானம் கோ தானம்
முதல் பண்ணிக்
கைவூர நிதி வீசிக் காகுத்தன் காளையர்கள்
பிறந்தாரென்று
மையார் பூம்பொழினகரி மகிழ்வெய்திமணி
முரசமறைந்துநின்று
நெய்யாடலாற் சனங்கள் என்படுமோ என்று
நினைத்து நைந்தான்''

தீயவனான அரக்கனது அழிவைக் கொண்டாடவே ஆடை ஆபரணங்கள் யாவருக்கும் தானம் செய்து மக்கள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு நீராடுவர். ஐப்பசி மாதம் மழைக் காலம். பலவிதமான சிறுசிறு பூச்சிகள் ஈரத்தில் தோன்றித் துன்புறுத்தும். இவைகள் பட்டாசு போன்ற வெடி மருந்துகளின் வாசத்தில் அழிய வேண்டும் என்பதற்காக வெடி முதலானவற்றை உபயோகித்தனர். நம் முன்னோர்கள் எக்காரியம் செய்தாலும் நம் ஆன்மீக முன்னேற்றத்திற்கோ



கொண்டாட்டத்திற்காகவோ மட்டுமில்லாமல் மக்களின் ஆரோக்கியத்திற்காகவும் செய்வர் என்பது குறிப்பு.

காலை 3 மணிக்கு முன்னால் குளிக்கக்கூடாது. அது தண்ணீரின் தேவதையான கங்காதேவி தூங்கும் நேரம் என்பர். இராமனைப் பிரிந்து நந்திக் கிராமத்தில் 14 வருடங்கள் வாழ்ந்த பரதன் அந்த நாட்கள் முழுவதும் ''எனக்குப் பாவம் வந்தாலும் வரட்டும். பொழுது விடிந்த பின் நீர்நிலைக்கு வந்தால், அண்ணனின் அரசை வாங்கிக்கொண்ட நேர்மையற்றவன் என என்னைச் சுட்டிக்காட்டி எவராவது பேசிவிடுவர். எவர் கண்ணிலும் நான் படமாட்டேன்'' எனக்கூறி காலை 3மணிக்குமுன்னால் நீராடுவான் என ஒரு செய்தி உண்டு.

தீபாவளியன்று காலை 3 மணிக்கு தைல நீராடுவோருக்குக் கங்கையில் நீராடிய நற்பலன் உண்டு என்பது பெரியோர் வழக்கு.

வடநாட்டிலே இதே பண்டிகையை நிறைய விளக்குகளை ஏற்றிவைத்து, இருளை விரட்டி, வெளிச்சம் வரும் விழாவாகக் கொண்டாடுவதுடன் புத்தாடை உடுத்தி, வியாபாரிகள் புதுக் கணக்கு ஆரம்பிக்கும் நாளாகக் கொண்டாடுவர். தீபங்களை வரிசையாக வைப்பதால் தீபாவளி எனப் பெயர் பெற்றது இப்பண்டிகை.

நாட்டில் தீயசக்திகள் ஒழிந்து தருமம் தழைத்து யாவர் வாழ்விலும் ஒளிநிறைந்து வாழ அருளுமாறு உருக்குமணி சத்யபாமை உடனாய கண்ணனை வணங்கி நேயர்கட்கும் நாம் தீபாவளி வாழ்த்துக்களைக் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

★★★

# திருச்செந்தூர்த் தல வரலாறு

– டாக்டர் ந. கல்யாண சுந்தரம்

### இருப்பிடம்

திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடிக்குத் தெற்கே நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. குறிஞ்சிக் (மலை) கடவுள் முருகன். இங்கே கடற்கரையில் சந்தனா மலையில் அமர்ந்துள்ளான், "செந்தில் மாமலையுறும் செங்கல் வராயன்" என தேவராயசுவாமிகள் பாடுகிறார். வடமொழியில் இதைக் கந்தமாதன பர்வதம் என்பர்.

### பெயர்கள்

திருமுருகாற்றுப் படையில் இவ்வூர் திருச்சீரலைவாய் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. செந்தில் என்ற பெயரும் உண்டு. செந்து என்றால் உயிர். இல்-அடைக்கலமான இடம். உயிர்களுக்கு அடைக்கலமான இடம். செந்திலூர் என்ற பெயர் மருவிச் செந்தூர் என்றாயிற்று. வடமொழியில் ஜெயந்திபுரம் என்று கூறுவர். சேந்து(முருகன்) + இல் என்றும் கூறலாம்.

### படைவீடு

சூரனை வென்ற பின்னரே திருப்பரங்குன்றத்தில் தெய்வானை திருமணம் நடைபெற்றது. எனவே திருச்செந்தூரே முதற்படை வீடு என்று கூறுவாருமுளர். ஆனால் நக்கீரர் திருப்பரங்குன்றத்தை முதலிலும் திருச்செந்தூரை இரண்டாவதும் குறிப்பிடுகின்றார்.

### பழமை

கடைச் சங்க காலப் புலவர்கள் இவ்வூரைக் குறித்திருப்பதால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வூர் சிறப்புற்று விளங்கியது என அறிகிறோம். அகநானூறு என்னும் நூலில் பரணர் என்னும் புலவர் அலைவாயின் சிறப்பைப் பாடியுள்ளார். வயலிலே உழவர்கள் உழும்போது எழுப்பும் ஓசையைக் கேட்ட தோகை மயில்கள் தெய்வம் குடியிருக்கும் மலையில் வந்து தங்கும் எனக் கூறுகிறார்.

புறநானூற்றில் மதுரை மருதன் இளநாகனார் என்னும் புலவர் 'வெண்தலை புணரி அலைக்குஞ் செந்தில்' எனப் பாடுகிறார். திருச்செந்தூருக்கு வருவோர் முதலில் தொலைவிலிருந்து காண்பது கடல்நுரைகளையே. வெண்மையான தலைகளோடு கூடிய அலைகள் சீறிப்பாய்ந்து செந்தூர் வந்து முருகன் காலடியில் ஆணவம் ஒழிந்த சூரன்போல் அடைக்கலமாகி மறைகின்றன.


அதே புலவன் திருச்செந்தூர் கடற்கரையில் காற்று வீச மணல்மேடு எழுவதையும் பாடியுள்ளான். இன்றும் அதே நிகழ்ச்சியைச் செந்தூரில் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் 'சீர் கெழு செந்தில்' எனப் பாடியுள்ளார். இடைச்சங்கம் இருந்த கடல் கொண்ட கபாடபுரத்தின் ஒரு பகுதியே திருச்செந்தூர். இவ்வூரைச் சுற்றி வாழ்வோர் இதனை இரண்டாம் திருச்செந்தூர் என்றும், முதல் திருச்செந்தூர் கடலில் மறைந்து விட்டது என்றும் கூறுவர். முருகனிடம் தமிழ் கற்ற அகத்தியருக்கு இவ்வூரில் கோயில்கள் உண்டு. முனியசாமி கோயில் என்பது அகத்தியர் கோயிலைக் குறிக்கும். நக்கீரர் ஆறுமுகப் பெருமானையும் அவரது பன்னிரு கைகளின் செயல்களையும் திருமுருகாற்றுப்படையில் கூறியுள்ளார். ஆகவே இவ்வூர் பழமையும் பெருமையும் வாய்ந்த ஊர் என அறிகிறோம்.

### கி.பி. ஏழாம் நூற்றாண்டு :

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் திருமறைக்காடு (வேதாரண்யம்) சென்றார். அங்குள்ள கடற்கரை அவருக்குத் திருச்செந்தூரை நினைவுபடுத்தியது. 'நம் செந்தில் மேயவள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்' என அவ்வூர்த் தாண்டகத்தில் பாடினார். நம் என்ற சொல்லை நம் செந்தில், நம் வள்ளி மணாளன், நம் தாதை (தந்தை) எனக் கூட்டி உரைக்குமாறு பாடியுள்ளார்.

### கி.பி. எட்டாம் நூற்றாண்டு :

இக்கால கட்டத்தில் பல்லவர்கள் தமிழ்நாட்டில் குகைக் கோயில்கள் அமைத்தது போலவே பாண்டியர்களும் குகைக் கோயில்கள் அமைத்தனர். கி.பி.



எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஆதிசங்கரர் தம் காசநோய் நீங்க இங்கு வந்து கந்தனை வழிபட்டு அருள்பெற்றார். அவரது சுப்பிரமணிய புஜங்கம் ஏழாவது செய்யுளில்

''பெருவேலை ஓரத்தி லேபாவம் நீக்கும்
பிரசித்தி சேர்சித்தவர் வாழ்கந்த வெற்பில்
ஒருசோதி வடிவோடு குகைமேவு செந்தூர்
உயிருக்கொ ருயிர்செம்பொன் அடிபற்று வோமே''

எனப் பாடியுள்ளார். இதன் கருத்து நீலத் திரை கடல் ஓரத்திலே நம் பாவத்தை நீக்க நிற்பது கந்தமாதன பர்வதமெனும் சந்தனாமலை. அம்மலையின் குகையிலே பேரொளிப் பிழம்பாகக் குகன் குடி கொண்டுள்ளான். உயிருக்கு உயிரான அவன் பொன்னடியைப் போற்றுவோம். இப்பாடலிலே திருச்செந்தூர் முருகன் கோயில் குகைக்கோயில் எனப் பாடப்பட்டுள்ளது.

'இம்மலையில் எறினோர்கயிலை மலையில் ஏறிய பலன் பெறுவர்' என ஆதி சங்கரர் ஆறாம் பாடலில் குறிப்பிடுகிறார். இதை அப்படியே ஏற்றுக்கொண்ட அருணகிரி நாதர்' கயிலை மலை யணைய செந்தில் பெருவாழ்வே' என்று எழுநூறு ஆண்டுகட்குப் பின் பாடியுள்ளார்.

## கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு :

கி.பி. 875இல் இரண்டாம் வரகுண பாண்டியன் இக்கோயில் பூசைக்காகப் பல ஏற்பாடுகளைச் செய்த கல்வெட்டுகள் உள்ளன. அவன் காலத்தில் இக்கோயிலில் ஒரு நாளைக்கு 18 நாழி அரிசி சமைக்கப் பெற்றது. நாழி உரி நெய்யும் பயன்பட்டது. வாழைப்பழம் 16, சர்க்கரை 4 பலம், சிறுபயற்றம் பருப்பு 2 நாழி, வெற்றிலை 3 பற்று அடைக்காய் (பாக்கு) 56, பசுவின் பால் 8 நாழி, நறும்பூ (மாலை கட்ட) 10 நாழி, இளநீர் 32, மஞ்சள் 3 உழக்கு, சந்தனம் 3 பலம் வழங்க ஏற்பாடு செய்தான். திருவிழாக் காலங்களில் கூடுதலாக வழங்கவும் ஏற்பாடு செய்தான்.

## கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு :

அருணகிரி நாதர் திருச்செந்தூருக்கு வந்து 83 திருப்புகழ் பாக்கள் பாடியுள்ளார். அவற்றைத் தொகுத்துத் திருச்செந்தூர்த் திருப்புகழ் என்ற தலைப்பில் தருமபுர ஆதீனம் கி.பி. 1959 இல் வெளியிட்டுள்ளது. அருணகிரிநாதர் கூறும் திருச்செந்தூரைக் காண்போம்.

முதல் பாடலில் முருகன் தன் தந்தை நடராசரைப் போல ஆடும் கூத்தை விவரிக்கிறார். ஆவணி, மாசித்

திருவிழா ஏழாம் நாள் எழுந்தருளும் சிவப்புச் சாத்தியின் பின்புறம் ஆறுமுகப் பெருமானை நோக்கினால் அவர் அருணகிரி நாதருக்காக ஆடிய ஆடலைக் காணலாம்.

இரண்டாம் பாடலில் மணியும், முத்தும் தென்னை மரங்களில் தங்கிப் புரளும்படி அலைவீசும் திருச் செந்தூர் என்கிறார். அவ்வூர்க் கடலில் மகர மீன்களும் சங்குகளும் வாழ்கின்றன என்கிறார். செஞ்சொற் புலவர்கள் வாழும் ஊர் என்கிறார். *(4)*. பவளம் போன்ற மதில் சூழ்ந்த ஊர் என *(6)* மொழிகிறார். வாழையும் இஞ்சியும் இடைவிடாது நெருங்கிய ஊர் என *(7)* இயம்புகிறார். தாமரை ஓடையிலும் மேடையிலும் முத்துக்ளைச் சங்குகள் வீசும் ஊர் *(11)* என உரைக்கிறார். கரும்புச் சோலையும் வாழையும் திகழும் ஊர் *(12)* எனச் செப்புகிறார். சந்தனத்தின் சோலை சூழ் செந்தில் *(17)* என்று பகர்கிறார். தெளிநீர்க் குளங்களும் பொழில்களும் கூடிய ஊர் *(31)* என்கிறார். மரக்கலங்கள் கடலிடையே தவழ்ந்து வரும் காட்சியைக் *(34)* காட்டுகிறார். இனிய கனிகளை மந்தி சிந்தும் ஊர் *(35)* என்றும், கயிலை மலையனையது செந்திற்பதி எனவும், கமுகும் தெங்கும் நிறைந்த ஊர் *(46)* என்றும் வருணிக்கிறார். செந்தில் என்று கூறினாலே உய்யலாம் என *(55)* அறைகிறார்.

## திருச்செந்தூர் பற்றிய செய்யுள் நூல்கள்

திருச்செந்தூர் பற்றி நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை, ஆதிசங்கரர் பாடிய சுப்பிரமணிய புயங்கம், குமரகுருபரர் பாடிய கந்தர்கலி வெண்பா ஆகியன இவ்வூர் முருக பக்தர்கள் சங்கத்தால் கடந்த ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இன்னும் சுவாமி நாததேசிகர் பாடிய திருச்செந்திற்கலம்பகம், சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய நிரோட்டக யமக அந்தாதி, வென்றி மாலைப்புலவர் பாடிய திருச்செந்தூர்த் தல புராணம், அருணகிரி நாதர் பாடிய திருச்செந்தூர்த் திருப்புகழ், பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர் அகவல், ஆழ்வார் திருநகரி அந்தணர் இயற்றிய சிறைவிடு அந்தாதி, தண்டபாணி சுவாமிகள் தந்த திருச்செந்தில் பிரபந்தங்கள், கந்தசாமிப்புலவர் பாடிய நொண்டி நாடகம், சீனிப்புலவர் பாடி ஏட்டளவில் உள்ள திருச்செந்தூர்ப் பரணி, பாம்பன் சுவாமிகள் பாடிய திருவலங்கல் திரட்டு, சண்முக கவசம், அண்ணாமலை ரெட்டியார் அருளிய காவடிச் சிந்து, சரவணப்பெருமாள் கந்த வருக்கச் சந்த வெண்பா, பங்கயம் அம்மையார் பாடிய சந்நிதிமுறை, திருச்செந்தூர்க் குறவஞ்சி, முத்தம்மை ஆச்சி பாடிய திருச்செந்தின்மாலை, திருச்செந்தூர்ப் பள்ளு முதலிய நூல்களை ஆண்டுதோறும் ஒவ்வொரு நூலாக வழங்க வேண்டுமென்பதே திருச்செந்தூர் முருக பக்தர்கள் சங்கத்தின் ஆசை.

## தீர்த்தங்கள்

தீர்ப்பது தீர்த்தம். தாகம் தீர்க்கும் தண்ணீரும் தீர்த்தம். பிணியினைத் தீர்க்கும் சுனையும் தீர்த்தம். கங்கை முதல் பொருநை வரை அனைத்துப் புண்ணிய நதிகளும் கலந்த கடல் இங்கு பெரும் தீர்த்தம், மூலவருக்கு முன்புள்ள வதனாரம்ப (முகம்) தீர்த்தத்தில் மூழ்கி உக்கிர பாண்டியன் மகள் குதிரை முகம் மாறி மனித முகம் பெற்றாள். பாண்டியன் திருச்செந்தூர்க் கோயிலில் திருவிழாக் கொண்டாட கொடிமரம் நட்டான். சந்தனக் கொடிமரம் பொதியமலையிலிருந்து கொண்டு வரும் போது அம்மரத்தில் சுடலை மாடன், அக்கினிமாடன், பூதத்தார் போன்ற சிறு தெய்வங்கள் வந்தன. திருச்செந்தூர் எல்லையிலுள்ள வெயிலுகந்தம்மன் அவற்றிற்கு உரிய இடமளித்து மரத்தைவிட்டு அகலச் செய்தாள். கொடி மரக்கதை என்ற வில்லுப்பாட்டு நூல் உள்ளது. இத்தீர்த்தத்தில் இன்று பாறைகள் மிகுதி, குளிப்பது ஆபத்தானது. எனவே கடலின் தென்புறம் மக்கள் நீராடுகின்றனர்.

## நாழிக்கிணறு

''மூர்த்தி அறுமுகச் செவ்வேள் உருவே
தீர்த்தம் என்பது நாழியின் நீரே
ஏத்த ரும்தலம் திருச்செந்தூரே''

என்ற ஆசிரியர் பாடலால் அறுமுகச் செவ்வேள் சூரனை வென்ற பாவம் தொலைய நாழிக்கிணற்றை உருவாக்கினார். அதில் அவரும் அனைத்துத் தேவரும் நீராடினர். இது ஆறுமுகப் பெருமான் முன்பு உள்ளது.

## சரவணப் பொய்கை

கலையரங்கத்தை அடுத்த தோரணவாயில் வழியே நேராகச் சென்றால் வலப்புறம் சரவணப் பொய்கை பற்றிய அறிவிப்பைக் காணலாம். இதிலும் நீராடிப் பாவம் போக்குவர்.

## மூர்த்தி

இறைவன் சத்து, சித்து, ஆனந்தம் என முப்பொருளாய் விளங்குகின்றான். சத்து சிவனையும், சித்து தேவியையும், ஆனந்தம் முருகனையும் குறிக்கும் என்பர். ஆண்டவன் என்ற சொல் பொதுவாகக் கடவுளைக் குறிக்கும். திருச்செந்தூரில் ஆறுமுகப்

பெருமான் செந்தில் ஆண்டவன் என்றும், பழநியில் தண்டாயுதபாணி பழநி ஆண்டவன் என்றும் வழங்கப் படுதல் இந்த இரண்டு ஊர்களுக்கும் சிறப்பு. செந்தில் வேலனே பழநிவேலன் என்பர். மேலும் இங்குள்ள மூலவர் சடைமுடி தரித்து கடற்கரையாண்டியாக வும் காட்சி தருகிறார். ஆண்டிக்கோலத்தையும் ஆண்டவன் கோலத்தையும் இவ்வூரையன்றி வேறெங்கு ஒருசேரத் தரிசிக்க முடியும்? மூலவரின் பிரதிபிம்ப மாக செந்தில் நாயகர் (ஜெயந்தி நாதர்) விளங்கு கிறார். ஆறுமுகப் பெருமானின் பிரதிபிம்பமாக குமர விடங்கப் பெருமான் விளங்குகிறார். ஆவணி, மாசித் திருவிழாக்களில் இவ்விரு மூர்த்திகளும் எழுந்தரு ளுவது சிறப்பு. வேறு தலங்களில் காண முடியாத காட்சி.

இதுமட்டுமா. ஆறுமுகப் பெருமான் ஆவணி, மாசித் திருவிழாக்களில் ஏழாம் நாள் சிவப்புச் சாத்தி யும், எட்டாம்நாள் காலை வெள்ளை சாத்தியும், நண்பகலில் பச்சை சாத்தியும் எழுந்தருளுதல் கண் கொள்ளாக்காட்சி. 'நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே' என்று அன்பர் பாடியதும் இக் காட்சியைக் கண்டுதான்.

இக்கோயிலில் முந்திய மூலவரின் பிரதிபிம்பமான அலைவாய் கந்த பெருமான் என்ற மூர்த்தியும் எழுந்த ருளும் மூர்த்தியாக உள்ளார்.

### இலை விபூதி

பன்னீர் மரங்களின் இலையில் மடித்து வைத்து இக்கோயிலில் இலை விபூதி வழங்கப்படுகிறது. இவ் விலைகள் காசநோய் தீர்க்கும் தன்மை வாய்ந்தன. இலையை உண்ணலாம்.

### சஷ்டி விரதம்

கடற்கரை அருகே உண்ணா நோன்பு கொள்ளு தலே உடலுக்கு நன்மை. எனவே, இவ்வூரில் பல இடங்களிலுமிருந்து பக்தர் கூடி ஆறு நாட்கள் விரத மிருப்பர். சஷ்டி விழாவின் போது ஆறு நாட்களும் வேள்வி நடைபெறும். அவ்வேள்விப் புகை உடலுக்கு நன்மை தருமென்றும் மழைவளம் தருமென்றும் கூறுகின்றனர். 'சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும்' என்ற பழமொழி இவ்வூரைப் பொருத்தவரை சஷ்டியில் பிள்ளைப்பேறு வேண்டி விரதமிருந்தால் அகப்பையில் (கருப்பையில்) குழந்தை உருவாகும் என்பதை அன்பர் பலர் கைமேற்பலனாகப் பெற் றுள்ளனர்.

### திருச்செந்தூரில் காண வேண்டியவை

ஊர் நடுவிலுள்ள சிவக்கொழுந்தீசுவரர் கோயில் இக்கோயிலுள்ள கலை மண்டபத்தில் இசைத்தூண் களும் அழகிய சிற்பங்களும் உள்ளன.

மேலக் கோபுரத்திலமைந்த சுதை வேலைப் பாடான புராண வரலாறுகள். கோபுரத்தின் உட்புறச் சுவர்களிலுள்ள நாயக்க மன்னர் காலத்து வண்ண ஓவியங்கள்.

மூலவர் சந்நிதிக்கு வலப்புறம் அமைந்துள்ள பஞ் சலிங்கங்கள்

கோயிலுக்கு வடபுறமுள்ள வள்ளி ஒளிந்த குகைக் கோயில்

கோயிலுக்குத் தெற்கேயுள்ள நாழிக்கிணறு. அதனை அடுத்துள்ள மூவர் சமாதி.

### மூவர் சமாதி

நாழிக்கிணற்றுக்குத் தெற்கே வெள்ளைக்கல் மண்டபமாக இருந்த கோயிலைக் கருங்கல் கோயி லாக மாற்றி அமைந்த ஆறுமுக சுவாமி சமாதியும், கோயிலைச் சுற்றியுள்ள மண்டபங்களை அமைத்த மௌன சுவாமி, காசி சுவாமி ஆகியோர் சமாதிகளை யும் காணலாம்.

### நவக்கிரகங்கள் இன்மை

'குமரேசன் இருதாள் பணிவோர்க்கு நாள் என் செய்யும்? கோள் என் செய்யும்?' இக்கோயிலில் சனீசு வரர்க்கு மட்டுமே பிற்காலத்தில் சந்நிதி அமைக்கப் பட்டது. நவக்கிரகங்கட்கு என சந்நிதியில்லை. ஆனால் அக்கிரகங்களின் அதிபர்கள் உள்ளனர். மூலவ ருக்கு வலப்புறம் சூரியலிங்கம் உள்ளது. செந்தில் நாயகர் அறையில் சந்திரலிங்கம் உள்ளது. சந்திர னுக்கு அதிபதியான அம்பாள் சந்நிதிகள் உள. செவ்வாய்க்கு அதிபதி முருகன். புதனுக்கு அதிபதி யான திருமால் உள்ளார். குருவுக்கு அதிபதியான தட்சிணாமூர்த்தியுமுள்ளார். சுக்கிரனுக்கு அதிபதி யான இலக்குமியுள்ளார். சனிக்கு மட்டும் சந்நிதி யுள்ளது. இராகுவுக்கு அம்மன்; கேதுவுக்குரிய கணபதி இக்கோயிலில் உள்ளனர்.

★★★

# திருஆவினன்குடிப் பெருமானே

ஜி. வெங்கடேசன் M.E., M.I.E.,
- செயற்பொறியாளர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

முருகன் என்றாலே அழகன் என்றுதான் பொருள். நாம் வழிப்படுகின்ற தெய்வங்களில் முருகப் பெருமானுக்கு மட்டும் தனிச்சிறப்பும், அளவற்ற பெருமையும் உண்டு. அவனுடைய ஒவ்வொரு முகத்திற்கும் தனிய ழகு உண்டு. கந்தன், கார்த்திகேயன் என்று அடியவர்கள் மனமுருகிப் பாடுகின்ற அவனை, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் ''முருகு'' என்பதற்கு இளமை, அழகு, வீரம் எனப் பலபொருள் கூறுகின்றார். ''கைபுனைந் தியற்றாக் கவின் பெறும் வனப்பு'' என்று திருமுருகாற் றுப்படை முருகன் அழகினைக் கூறுகின்றது. தேவேந் திரனையும், தேவர்களின் கூட்டத்தையும் காப்பதற்காக அவதரித்தவன் முருகன். தன்னுடைய சக்தி வாய்ந்த வேலினால் அசுரர்களோடு போர்புரிந்து அவர்களை அழித்து தேவர்களை காத்ததினால் அவனுடைய வீர அழகு புலப்படுகிறது.

கந்தனின் புகழ்கூறும் குமாரதந்திரம், ஸ்ரீதத்துவ நிதி என்னும் தத்துவ நூல், காமிகாகமம் என்னும் ஆகம நூல் எனப் பல நூல்களில் கூறப்பட்டிருக்கும் முருகனின் வடிவங்கள் பதினெட்டு. அவை 1. ஞான சக்திஸ்வரூபன், 2. ஸ்கந்தன், 3. அக்னி ஜாதன், 4. சௌரபேயன், 5. காங்கேயன், 6. சரவணபவன், 7. கார்த்திகேயன், 8. குமாரன், 9. ஷண்முகன், 10. தாரகாரி, 11. சேனாநீ (சேனாபதி) 12. குகன், 13. பிரம்மச்சாரி 14. தேசிக சுப்ரமண்யன், 15. கிரௌஞ்சபேதன், 16. சிகிவாகனன், 17. வேலாயுதன், 18. அங்காரக அதிதேவதா ரூப ஸ்கந்தன் முதலியன.

மூவரும் தேவரும் போற்றும் முழுமுதற் பரம் பொருளாம், முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள அறுபடை வீடுகளில் மூன்றாவது வீடு பழனி, பழைமையான ஞானத்திருப்பதி இப்பழனியம்பதி.

அம்மை அப்பனைச் சுற்றி வந்து பழம் வாங்கிய விநாயகப் பெருமானைக் கண்டதும் கோபம் கொண்டார் இளையவர் முருகா, இறைவனும் தேவியும், ''ஞானப் பழமே நீயாக இருக்கையில் உனக்கெதற்குப் பழம்'' எனச் சமாதானப்படுத்தினர். ஆறுதல் அடையாமல் மயிலேறிப் பறந்தார் முருகர். அதே வேடத்துடன் திருவாவினன்குடி வந்து சில காலம் தங்கிப் பிறகு பழனி மலை மீது தங்கி அருள் பாலிப்பதாக பழனித் தலப் புராணம் சொல்கிறது. 'பழம் நீ' என்று அம்மையப்பர் சொன்னபடியால் 'பழனி' யானதாகவும் கூற்று உண்டு.

இப்போதும் திருவாவினன் குடியில் மயில் மீது அமர்ந்து குழந்தை வேலாயுதனாகக் காட்சியளிக்கும் இளங்குமாரனைத் தரிசித்த பிறகுதான் மலையேறி உச்சியில் இருக்கும் தண்டாயுதபாணியின் அருள் பெறுகிறார்கள் பக்தர்கள்.

காரியம் கை கூடினால் 'பழம்' என்பார்கள். பழனி முருகனை வழிபட்டோர்களுக்கு நினைத்த காரியம் யாவும் பழமாகும் என்பது தெய்வ சித்தி. சிவகிரி, பழனாபுரி, பொதினி எனப்பல பெயர்கள் கொண்டது பழனி. ''காசியின் மீறிய பழனாபுரி மேவிய பெருமாளே'' எனவும், ''பதினாறுலகோர் புகழ் பழனி'' எனவும் அருணகிரி நாதர் போற்றுகிறார்.

பழனி மலை இங்கு உண்டானதற்கு ஒரு புராண வரலாறும் உண்டு. கயிலாயம் சென்ற அகத்திய மாமுனிவர் சிவகிரி, சக்திகிரி என்ற இரு தெய்வக் குன்றுகளையும் தரிசித்து விட்டு தென்னாட்டுக்கு வந்தார். வழியில் இடும்பாசூரனையும் அவன் மனைவி இடும்பியையும் கண்டார். இடும்பனிடம் கயிலாகக் குன்றுகள் இரண்டையும் பெயர்த்து எடுத்துக் கொண்டு பொதிகை மலைக்கு வரப் பணித்தார். அவ்வாறே இடும்பன் கயிலாயத்திற்குச் சென்று குன்றுகள் இரண்டையும் தரிசித்து தொழுது அகத்தியர் உபதேசித்த மூல மந்திரத்தைச் சொன்னான்.

மந்திரசக்தியால் பிரம தண்டமும் எட்டு நாகங்களும் அவன் முன் தோன்றின. அஷ்ட நாகங்களைக் கயிறாகவும், பிரம்ம தண்டத்தை தோளில் வைக்கும் தடியாகவும் கொண்டு சிவ சக்தி குன்றுகளைப் பெயர்த்து எடுத்துக் கொண்டான். நாகங்களைச் சுருட்டி உறிபோல் செய்து அவைகளில் இரு மலைகளையும் வைத்தான். தண்டத்தில் சேர்த்து தோள்களில் வைத்துக் கொண்டு புறப்பட்டான். அம்மலைகளை சுமந்தபடி தென்திசை நோக்கி நடந்தான்.

ஆவினன் குடியை அடைந்தவன் இளைப்பாறுவதற்காகக் காவடியைச் சற்று கீழே வைத்தான். களைப்பைப் போக்கிக் கொண்டு புறப்பட எத்தனித்த போது காவடியைத் தூக்க முடியவில்லை. குன்றின் மேல் ஒரு சிறுவன் நின்று கொண்டு ''குன்றுகள் இருக்குமிடம் என் இருப்பிடம் விட்டுவிட்டு போ'' என்றதும், சினம்

கொண்ட இடும்பன் சிறுவன் மீது பாய்ந்தான். பாய்ந்த மாத்திரத்தில் வேரற்ற மரம் போல் மண்ணில் சாய்ந்தான்.

கணவனை இழந்து கதறினாள் இடும்பி. கந்த வேளிடம் புலம்பினாள். முருகனின் கடைக்கண் அருளால் உயிர் கொண்டு எழுந்தான் இறந்த இடும்பன். ''இக்குன்றுகள் இங்கேயே இருக்கட்டும். நீயும் இங்கேயே கோயில் கொண்டு இருப்பாயாக' என்று அருளாசி தந்தார் குமரன்.

பழனி மலையின் நடுப்பகுதியில் இடும்பன் கோயிலும், அருகிலேயே வேலவர் கோயிலும் இருப்பதை இப்போதும் நாம் காணலாம்.

பழனி மலைப் படிகள் ஏறுமுன் நமக்குக் காட்சி கொடுப்பவர் அருள்மிகு பாதவினாயகர். அங்கிருந்து மேலே சென்றவுடன் இடும்பன் கோயில் இருக்கிறது. காவடிப் பிரார்த்தனை செய்வோர் காவடியுடன் இங்கு வந்து இடும்பனுக்கு பிரார்த்தனை செய்த பின் மேலே செல்லுகிறார்கள்.

மலை உச்சியில் பழனி ஆண்டவன் சந்நதி மேற்கு நோக்கி இருக்கிறது. திருவாயிலில் நுழைந்து மயில் மண்டபம். மணிக்கட்டி மண்டபம் தாண்டி ராஜகோபுர வாயில் வழியே பாரவேல் மண்டபத்தை அடையலாம். அங்கே கற்றூண்கள் பல அற்புதமான சிற்ப வேலைப் பாடுகளுடன் காட்சியளிக்கின்றன. அதையும் கடந்தால் நவரங்க மண்டபத்தை சேரலாம். அங்கிருந்துதான் அருள்மிகு பழனி ஆண்டவன் திருக்கோலத்தை தரிசிக்க வேண்டும்.

முருகன் தண்டாயுதபாணியாக காட்சியளிக்கும் திருவுருவத்தை போகர் என்ற சித்தர் நவபாஷாணத்தால் செய்தாரென்பர். அதனால்தான் பாடிவரும் பக்தர்களின் நோய்களை நொடியில் தீர்க்கும் வல்லமை பழனிமலை பரமனுக்குண்டு.

பழனி முருகனின் தனிச்சிறப்பு ராஜ கம்பீரத்தோடு நிற்கும் இராஜ அலங்காரம். மற்றொன்று ஆண்டி வேடம்.

தைப்பூசம், பங்குனி உத்திரம், முதலிய நாட்களில் ஆயிரக்கணக்கான காவடிகள் இங்கு வரும். அவர்கள் முருகனை நினைத்து ஆடிபாடுவது நம் உள்ளத்தை உருக்கும். பக்த கோடிகள், பால், தயிர், இளநீர், பூ, பழம், நெய், தேன், சர்க்கரை போன்றவற்றை காவடி களாக சுமந்து வருவர்.

முருகன் பக்தர்களுக்கு காட்சி கொடுத்து ஆட் கொள்ளும் பொருட்டு தங்கத்தேர் ஏறி, மலைப் பிரகா ரத்தில் திருவுலா வரும் காட்சி மனிதப்பிறவி எடுத்தோர் அனைவரும் காண வேண்டிய காட்சியாகும்.

இக்கோயிலில் போக சித்தருடைய சந்நிதியும், அவர் பூஜித்து வந்த புவனேஸ்வரி அம்மனும், பூஜா பொருட்களும் இன்றும் உள்ளது. கோயிலின் உட்பிரகா ரத்தில் போகர், மலைக்கன்னி, சிவலோக நாதர், அம்பிகை, சண்டேசுவரர் இவர்களுக்கும் தனிச்சந்நதி கள் உள்ளன.

அதிகாலை உதயத்தில் வையாபுரிக்குளம் ஆடி சண்முக நதியாடி, சரவணப் பொய்கையாடி, ஆவினன் குடி வணங்கி, பெரியநாயகி கோயில் தொழுது, மலை வலம் வந்து இடும்பன் கோயில் வணங்கி, மலைக்கோ யில் பலவும் வழிபட்டு, பழனியாண்டியையும், வள்ளி, தெய்வானையும் வணங்குவது சிறப்போ சிறப்பு' என தெரிவிக்கிறது ''வடிவேலர் சந்நதிமுறை''.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும் பழனி முருகன் மொழி - மதம் போன்ற வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் கடவுள் இவன். கேரள நாட்டினரும், முஸ்லிம் பெருமக்களும் ''அரோகரோ'' என்று சொல்லி பழனியம்பதியை தரிசிக்கும் காட்சியைக் கண்டு நாம் பரவசப்படலாம்.

''என் தாயும் எனக்கருள் தந்தையும் நீ<br>
சிந்தா குலம் ஆனவை தீர்த்து எனையான்<br>
கந்தா கதிர் வேலவனே உமையாள்<br>
மைந்தா குமரா மறைநாயகனே''

★★★

இபமாமுகன் தனக்கு இளையோனே!<br>
இமவான் மடந்தை உத்தமி பாலா!<br>
ஜெபமாலை தந்த சற்குருநாதா!<br>
திருஆவினன்குடிப் பெருமாளே!

# நம்மை வணங்கும் தெய்வம்

- கவிஞர் குமர விருச்சிகன், நாமக்கல்

நாமக்கல் நகரம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது - ஆஞ்சநேயர், லாரி மற்றும் கோழி. இந்த மூவருக்கும் ''பறக்க முடியும்'' என்பதே இவர்களுக்கு இடையேயான பொதுவான விஷயம். இவர்களுள் பின்னிருவரை நம்பி நஷ்டமோ, கஷ்டமோ பட்டவர்கள் இருக்கலாம். ஆனால் முதலாமானவரான ஆஞ்சநேயரை நம்பியவர்கள் நன்றாகவே இருப்பார்கள்.

நாமக்கல் ஆஞ்சநேயர் ஒரு ஏழை. ஏழைகளின் கடவுள். தன் தலைக்கு மேல் ஆகாயமே கூரையாய் இருப்பவர் (ஆஞ்சநேயர் வளர்வதாக ஒரு ஐதீகம். எனவே, மேலே கூரை இல்லை) நெடுநெடுவென நின்று, கம்பீரமாய் இரு கை கூப்பி நம்மையும் வணங்கி வரவேற்கிறார். பக்தர்களை வணங்கும் கடவுள்! (அவ்வணக்கம் எதிரே உள்ள லக்ஷ்மி நரசிம்மருக்காக)

ஆஞ்சநேய பக்தர்களை சனி பகவான் சங்கடப் படுத்த மாட்டார் என்பது ஐதீகம். ஆஞ்சநேயர் அப்போது இலங்கைக்குப் பாலம் போட பாறாங்கற்களைச் சுமந்து வந்து கொண்டிருந்தாராம். 'உன்னைப் பிடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது' என்று சனி பகவான். ஆஞ்சநேயரின் முதுகின் மேல் படுத்துக் கொண்டார். 'சரி! கற்களைப் பிடித்துக் கொள்' என்று கூறி சனிபகவான் மேலும் பாறாங்கற்களை அடுக்க ஆரம்பித்தாராம் ஆஞ்சநேயர். உயிரோடு கல்லறை கட்டி விடுவாரோ என்று பயந்து வெளியேறிவிட்டாராம் சனி பகவான்.

ஆஞ்சநேயர் குடிகொண்டுள்ள ஊர் என்பதால், நாமக்கல்லில் பிறந்தவர்களை, வாழ்கிறவர்களை, ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, அர்த்தாஷ்டமச் சனி என எதுவும் சிரமப் படுத்தாது. இவ்வகையில் நாமக்கல்காரர்கள் பாக்கியசாலிகள்.

வெண்ணெய்க் காப்பு - ஆஞ்சநேயர் மேனி முழுவதும் வெண்ணெய் பூசியபடி காட்சி தருவார். அவர் இலங்கையில், தீ மூட்டியதால் ஏற்பட்ட உடம்பின் உஷ்ணத்தைக் குறைக்கவும் குளிர்ச்சியாக்கவும் வெண்ணெய் பூசப்படுகிறது.

ஆஞ்சநேயரை வெண்ணெய்க் காப்பில் தரிசிக்கிறவர்கள் மனதில் உள்ள உஷ்ணம் குறைந்து, குளுமை பெறும் என்பது கண்கூடாய் நடக்கும் நிகழ்வு. அதே போல், சனித் தொல்லையால் சரிந்துகிடக்கிற, அவதிப்படுகிற அயலூர்க்காரர்கள் ஆஞ்சநேயரை அதிகாலையில் சனிக்கிழமையன்று தரிசித்தால் ஆனந்தம் சொந்தமாகும்.

நவக் கிரகங்களில் சனி தான் ரொம்பவும் கெட்டவர் என்று பலர் தவறான எண்ணம் கொண்டுள்ளது பற்றி ராகு பகவானுக்கு மிகுந்த வருத்தமுண்டு. மனித குலத்தை மட்டற்ற சிக்கலில் ஆழ்த்துவதில் அவருக்கும் பெரும் பங்குண்டு. ராகு பகவானுக்கு மிகவும் உகந்த தானியம் உளுந்து. அந்த உளுந்தை பிரதானமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் வடைகளை மாலையாகக் கோர்த்து ஆஞ்சநேயருக்கு அணிவிக்கும் வைபவம் ஒவ்வொரு மாதமும் நாமக்கல்லில் நடக்கிறது. எனவே, வடைமாலை அணிந்த ஆஞ்சநேயரைத் தரிசிப்பது ராகு தோஷம் நீங்க, மிகச் சக்தி வாய்ந்த பரிகாரமாகும். எல்லா வகை நாக, சர்ப்ப தோஷங்களும் பயங்களும் விலகும்.

ஆஞ்சநேயருக்கு நீளமான வால் உண்டு. (சில மனிதர்களுக்கும் உண்டுதானே!) இந்த வாலுக்கு நிறைய வேலைகள்.

மாடுகளுக்கு - தம் உடம்பில் பூச்சிகள், கொசுக்கள் உட்கார்ந்தால் அவைகளை விரட்ட

அணிலுக்கு - மரத்தில் ஏறும் போது தன்னை நிலை நிறுத்திக் கொள்ள

முள்ளம் பன்றிக்கு - முள் வாலால் (வாளால்?!) எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள.

மீன்களுக்கு - தண்ணீருக்குள் நீந்தித் திரிய

ஆஞ்சநேயருக்கு, இந்த வால், உணவுப் பொருட்களை எடுத்து வாய்க்குக் கொண்டு செல்லப் பயன்படுகிறது. (நமக்கு வலதுகை மாதிரி!)

இலங்கை வேந்தன் பாவம் செய்ததால், ஆஞ்சநேயரின் வால், நெருப்பை எடுத்து இலங்கையின் வாயில் ஊட்டியது. அது பற்றி எறிந்தது. எனவே, பாவம் செய்வோரின் வாழ்க்கையில், சில காலம் ஜொலிப்பு இருக்கும். பிறகு, நெருப்புப் பொறி பறக்கும். சாம்பலாகும்! இதுவே ஆஞ்சநேயரின் வால் தரும் தத்துவம்.

மனிதனுடைய கை மிகவும் வித்தியாசமானது. கட்டை விரலோடு, மற்ற விரல்கள் தொட்டுக் கொள்ள முடியும். ஒரு பொருளைப் பிடிமானமாய்ப் பற்றி எடுக்க, இவ்வித விசேஷ அமைப்பு உதவுகிறது. வேறெந்த உயிரினங்களுக்கும் இந்த வசதி இல்லை. ஏன், நம் காலில் கூட கட்டை விரல் உண்டு. ஆனால் மற்ற நான்கு விரல்களோடு தொட்டுக் கொள்ள முடியுமா? முடியாது.

ஆனால், ஆஞ்சநேயரது கால் கட்டை விரலோடு, மற்ற நான்கு விரல்கள் தொட்டுக் கொள்ளும்படி அமைந்துள்ளது. ஏனெனில், ஆஞ்சநேயரின், மூலமான குரங்கினத்தில் கால் அவ்வாறு அமைந்துள்ளது. (குரங்குகள் கண்ணில் பட்டால், அதன் காலை கவனித்துப் பாருங்கள்! உங்கள் கைப்பையிலும் ஒரு கண் இருக்கட்டும்).

நாம் கையால் பற்றி எடுப்பது மாதிரி, ஆஞ்சநேயரால் காலால் பற்றி எடுக்க முடியும். அப்போது தானே, 'தன் காலடியே சரணம்' என விழும் மனிதர்களைப் பற்றி தூக்கி, எடுத்து, ஆறுதலும், ஆனந்தமும் தரமுடியும். இதற்காகவே, அப்படி ஒரு காலமைப்பு ஆஞ்சநேயருக்கு. அனுமாரின் வாலும் காலும் நமக்குத் துணையிருந்தால், நாளும், கோளும் நம்மை ஒன்றும் செய்யாது.

கவிச் சக்ரவர்த்தி கம்பர் - 'அஞ்சு' என்கிற வார்த்தை (பஞ்ச பூதங்களைக் குறிக்கிற அர்த்தத்தில்) விளையாட்டு நடத்தி ஆஞ்சேநேயரை வர்ணிக்கிறார் :

''அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு
அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனெம்மை
அளித்துக் காப்பான்.

இந்தப் பாட்டின் அர்த்தம் :

அஞ்சிலே ஒன்று பெற்றான் - பஞ்ச பூதங்களாகிய வாயு, நீர், ஆகாயம், நிலம், நெருப்பு ஆகியவற்றில் ஒன்றான **வாயு** பெற்ற பிள்ளை ஆஞ்சநேயர்.

அஞ்சிலே ஒன்றைத் தாவி - **நீர்**மேல் (கடல் மேல்) தாவி.

அஞ்சிலே ஒன்று ஆறாக - **ஆகாய** வழியாக (ஆறு - வழி)

ஆரியர்க்காக ஏகி - ஆரிய குல திலகமான ராமனுக்காக இலங்கை சென்று

அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு - **பூமி**க்குப் பிறந்த நிலமகள் சீதையைக் கண்டு, அவருக்கு கணையாழி தந்து, ஆறுதல் சொன்னார் ராமதூதர்.

அஞ்சிலே ஒன்றை வைத்தான் - சீதையை சிறையெடுத்துப் பாவம் புரிந்த ராவண பூமியில், **நெருப்பை** வைத்தார் ஆஞ்சநேயர். அவர் பாவம் செய்யாதோரைப் பத்திரமாய்ப் பாதுகாப்பார்.

ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை போடுவது ஒரு விசேஷம். இதன் தாத்பர்யம் - 'அசோக' வனத்தில் 'சோகமான' சீதாப்பிராட்டியிடம் சொல்கிறார் அனுமார். ராமபிரானின் கேள்விக் கணைகளுக்குப் பதிலாக கணையாழியைத் தருகிறார். ''ராமதூதர் இவர்'' என்றறிந்த பிராட்டி, அருகே இருந்த வெற்றிலைக் கொடியிலிருந்து ஒரு வெற்றிலையை எடுத்து (வெறும் இலை அல்ல!) அனுமாருக்கு அளித்து ஆசிர்வதிக்கிறார். அதனால் தான் ''ஆஞ்சநேயர் அகம் மகிழும்'' என்று அம்மாலை அணிவிக்கப் படுகிறது. வெற்றிலை மாலை அணிந்த ஆஞ்சநேயரைத் தரிசித்தால், பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவர்.

திருமணமானவர்களில் பிரிய நினைப்பவர்கள் நீதிமன்றத்துக்கும், பிரிந்து, பின் சேர நினைப்பவர்கள் வெற்றிலை மாலையோடு நாமக்கல் ஆஞ்சநேயரிடமும் செல்லலாம். சீதையை ராமனோடு சேர்த்த அனுமார், அனுக்கிரஹம் செய்வார்.

நாமக்கல் ஆஞ்சநேயரே போற்றி! போற்றி!

★★★

# நினைக்கும்போதே செய்துவிடு!

– கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

ரதத்திலே பவனி சென்ற தருமரும் அர்ஜுன னும் - ஒரு அழகிய சோலையருகே ரதத்தை நிறுத்தச் சொல்லி - ஓய்வு மண்டபத்தில் - பகல் உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அவ்வழியே வந்த ஏழை ஒருவன்... தருமரைப் பார்த்து யாசகம் கேட்டான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த தருமர் வறியவனை யும் பார்த்து - தன்கையையும் பார்த்தார். வலது கை எச்சில் பட்டிருந்தது. தன் அருகே இருந்த சிறிய தங்கச் செம்பை இடது கையால் எடுத்து - அவனுக்குக் கொடுத் தார் - நன்றி கூறிவிட்டு அவனும் வாங்கிக்கொண்டு போய்விட்டான்!

தருமரின் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுனன் பொறுமை இழந்து.... தாங்களோ சாப் பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் - அந்த ஏழையோ கொஞ்சம் கூட நாகரீகமில்லாமல் அந்த நேரத்தில் பிச்சை கேட்கிறான். அவசரம் அவசரமாக இடது கையால் தங்கச் செம்பை அவனுக்குக் கொடுக்கிறீர் கள் - சாப்பிட்டு விட்டு சாவதானமாகத் தாங்கள் அந்த தர்மத்தைச் செய்தால் என்ன? கொஞ்ச நேரம் இரு என்றால் அவன் இருக்க மாட்டானா? எனக் கேட்டான்."

"மாலை வரை பொறுத்திருந்து செம்பை வாங்கிக் கொண்டு போ என்று நான் சொல்லியிருந்தாலும் அவன் காத்திருந்து வாங்கிக் கொண்டு போவான்... தம்பி! இந்த மனம் ஒரு குரங்கு - கொஞ்சம் தாமதித் தாலும் - குணம் மாறிவிடக்கூடும். இவனுக்கு எதற்கு தானம் செய்ய வேண்டும் என்று நினைக்கத் தோன்றும் .... அதனால் தான் - தர்மம் செய்வதாயிருந்தால் நினைத்தவுடன் செய்துவிட வேண்டும். அடுத்த கவளம் உண்ணும் வரை கூட இந்த உயிர் நிலைக்கும் என்ப தற்கு என்ன உத்தரவாதம்? - மூச்சிருக்கும்போதே உணர்வுகள் நிலைத்து நிற்கும் போதே - நல்லதை செய்துமுடி. நாளைத் தள்ளிப் போடாதே!" என்றார் தருமர்.

★★★

## நூல் மதிப்புரை

– நிறைமதி

1. நூல் பெயர் : தாயுமானவர் பாடல்கள்
பக்கங்கள் : 330
விலை : ரூ. 22.00

2. நூல் பெயர் : திருவாசகம்
பக்கங்கள் : 216
விலை : ரூ. 22.00

3. நூல் பெயர் : பட்டினத்தார் பாடல்கள்
பக்கங்கள் : 153
விலை : ரூ. 15.00

இம் மூன்று நூல்களையும்
வெளியிட்டுள்ளோர் : மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108

"பதிப்புச் செம்மல்" முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் மக்கள் எல்லோரும் படித்துப் பயன்பெறும் வகையில் பாடல்களை நன்குப் பதம் பிரித்துப் பொருள் எளிதில் விளங்கும் வகையில் மேற்காணும் நூல்களைப் பதிப்பித்து இருப்பது பாராட்டிற்குரியது. அனைவருடைய இல்லங்களையும் அலங்கரிக்க வேண்டிய அருமையான நூல்கள் இவை.

# "ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்"

"சிவஞான சித்தர்" டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

''ஈசரோடாயினும் ஆசை அறுமின்காள்?'' ஆம். பிறவிக்கடல் நம்மை ஈர்க்காமலிருக்க நாம் ஈசரோடா யினும் ஆசை கொள்ளாமலிருப்பதே நலம் பயக்கும்.

கிருத, திரேத, துவாபர மற்றும் கலியுகம் என்ற நான்கும் சேர்ந்தது மகாயுகம் அல்லது ஒரு சதுர்யுக மென்று பெயர். இதன் மொத்த ஆண்டுகள் 43,20,000 ஆகும்.

| | |
|---|---|
| கிரேதாயுகம் | 17,28000 ஆண்டுகள் |
| திரேதாயுகம் | 12,96000 ஆண்டுகள் |
| துவாபரயுகம் | 8,64,000 ஆண்டுகள் |
| கலியுகம் | 4,32,000 ஆண்டுகள் |
| மொத்தம் | 43,20000 |

எழுபத்திரண்டு சதுர்யுகம் ஒரு மனு, 14 மனு கொண்டது ஒரு கல்பம். இப்போது வைவஸ்ய மனு நடைபெறுகிறது. அதாவது வரிசையில் ஏழாவது மனு. நமது பிதுர்க்கடன் செய்யும்போது வைதீகர் ''வைவஸ்ய மந்ரே, பரத கண்டே...'' என்று குறிப்பிடு வதைக் காணலாம். கல்பம் தோறும் இராமாயணமும் மற்றும் மஹாபாரதமும் நடைபெறுகின்றன. இந்நேரம் அம்பாள் கண் இமைதட்டுகிறாள். கல்பங்களிலும் ''ஸ்வேத லோ ஹித கல்பம். ''ஸ்வேத வராக கல்பம்'' (இப்போது நடைபெறுகிறது) ஷ்ரௌத கல்பம் (Anthology vol.No-III Page 103) போன்றவை உண்டு. ஒரு கல்பகாலம் முடிந்தால் அது பிரும்மாவிற்கு அரை நாள். இதுபோன்று கணக்கிட்டால் நூறு வயதான உடன் இந்த பிரும்மா மறைந்து விடுவார். சென்ற கல்பத்தில் நிகழ்ந்த இராமாயணத்தில் தோன்றிய அனுமர், அடுத்த பிரும்மாவின் பதவிக்குத் தபசு செய்கிறார் என்று கூறப்படுகிறது. இந்தக் கணக்குப்படி நூறு பிருமர்கள் மறைந்தவுடன் ஒரு விஷ்ணு மறைந்து விடுவார். ஆயிரம் விஷ்ணு மறைந்தால் ஒரு ருத்திரன் மறைந்து விடுவார். இதன் படி ஒரு கோடி ருத்திரர்கள் வழிபட்டு உயர்ந்த இடம் திருக்கழுக்குன்றம் என்றால் அதன் புனிதத்தன்மையைக் கூறவும் இயலுமோ? சீதையின் கணையாழியை அனுமன் இராமரிடம் காட்டிய பின்பு ஒரு எண்ணெய்ப் பாத்திரத்தில் போடுவாராம். அத்திரி மஹரிஷி மனைவி அநுசூயா கடந்த இராமாயணத் திற்குள்ள கணையாழியைப் பார்த்தபோது, இது 14வது கணையாழியைப் பார்க்கிறேன் என்றாராம்.

பல அண்டங்கள் கொண்டது ஒரு புவனம். புவ னங்களின் எண்ணிக்கை அறிஞர்களின் கருத்திற்கு வேறுபட்டாலும், அண்டத்திலுள்ளது பிண்டத்தி லுண்டு. பிண்டத்திலுள்ளது அண்டத்திலுண்டு என்றக் கணக்குப்படி தொண்ணூற்று ஆறு எனலாம். நாம் இருக்கிற புவனம் ஐயனாருடையது என்பதால் அவரை நாம் சிறப்பு வழிபாடு செய்கிறோம். சைவசித்தாந்த மரபுப்படி மூன்று மலத்துடன் இருக்கும் சகலரான நம்மை இரு மலத்துடன் இருக்கும் பிரளயாகலர் ஒருவரைக் கொண்டு ஆட்சி செய்தும், இரு மலத்துடன் இருக்கும் பிரளாயாகலரை ஒரு மலத்துடன் இருக்கும் விஞ்ஞான கலரைக் கொண்டு ஆட்சி செய்வித்தும் மற்றும் விஞ்ஞான கலரை சிவபெருமானே நேரில் ஆட்சி செய்தும் வருகின்றார்.

ஒரு மலத்துடனிருக்கின்ற அனந்தேஸ்வரர், ஸ்ரீ கண்ட பரமேஸ்வரர் போன்றவர்கள் சதாக்கிய புவனத்தில் இருக்கிறார்கள். நால்வருக்கும் சின் முத்திரை காட்டிய தட்சிணாமூர்த்தி ஸ்ரீ கண்டபரமேஸ் வரரில் ஒருவரே, அவர் மூலப் பரம்பொருள் இல்லை. ஆவணி மூலத்தில் நரியை பரியாக்கி அரிவர்த்தன பாண்டியனுக்கு காட்டிய சிவ மூர்த்தம் பரம்பொருள் இல்லை. மதுரை வீதியில் பெண்களுக்கு வளையல் விற்று பெண்கள் கைகளில் வளையல் மாட்டி விட்ட சிவபெருமான் பரம்பொருள் இல்லை. அவ்வேளை இந்த சிவவேடம் தாங்கிய சிவபெருமானுக்கு சிவபூஜை செய்ய வேண்டிய நேரம் வந்தது. அவர் தம் ஆன்மலிங்கத்தை வெளியில் எடுத்துவைத்து அபிஷேக அலங்காரம் செய்து நிவேதனம் படைத்து சோடச உபசாரங்கள் செய்விப்பது போல் உண்மையிலேயே அவருடைய ஆன்ம லிங்கத்தை வெளிவைத்து சிவ பூஜையை முடித்து மீண்டும் இருதய கமலத்திற்கு எழுந்தருள வேண்டினார். ஆனால் அச்சிவலிங்கம் ''சுந்தரா, இவ்விடம் எனக்குப் பிடித்தமாக இருக்கிறது. ஆகவே இங்கேயே இருக்கிறேன்'' என்று கூறி விட்டது.

அதுதான் மதுரையம்பதில் பிரசித்திப்பெற்று விளங்கும் இம்மையில் நன்மை தருவார் கோயில். இக்கோயில் சிவகங்கை சமஸ்தான ஆளுகைக்குட்பட்டது. ஒரு காலக்கட்டம் வரை மதுரை நகரைச் சார்ந்த எல்லக் கோயில்களிலும் உள்ள உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலை வலம் வந்து நிலையத்திற்கு சேர வேண்டும். ஆனால் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உற்சவ மூர்த்தி வீதி உலா வரின் அது இம்மையில் நன்மை தருவார் கோயிலை வலம் வந்து நிலையத்தை அடைய வேண்டும் என்பது மரபு.

விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் வழிவிடு தெய்வம் என்று பெயர். இவைகளை வழிபட்டால் நம்மை இறுதியில் சிவனிடம் சேர்க்கும். இவைகளுக்குத் தோற்றமும் கிடையாது, ஆகவே அழிவும் கிடையாது. விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் சில யோனி வாய்ப்பட்டு பிறந்தவை. ஆகவே உலக நீதிக்குட்பட்டு அவைகள் இறந்தன. சிவபெருமான் யோனி வாய்ப்பட்டு பிறந்ததாக புராண வரலாறே கிடையாது. கோயில்களின் நுழைவாயில் இரு மருங்கிகனிலும் துவாரபாலகர்களைக் காணலாம். ஒன்று சுட்டு விரலை மூலஸ்தானத்தைக் காட்டி நின்று ஈசன் உள்ளிருப்பதை அறிவிக்கிறது. மற்றொன்று ஒரு கைவிரல்களை விரித்துக் காட்டிக் கொண்டிருக்கும். ஈசனுக்கு மேலே தெய்வம் இல்லை என்று அறிவிக்கும்.

நக்கீர தேவருடைய திருமுருகாற்றுப்படையில் திரு ஆவினன்குடி (பழநி) பதிகத்தை நோக்குங்கால் முருகனை மூவரும் வந்து வணங்கினார்கள் என்று குறிப்பிடப்பட்டது, இவர்கள் ஸ்கந்த லோகத்திற்கு கீழ் உள்ள புவனங்களிலுள்ள பிரும்மா, திருமால், சிவன். இவை அதிகார மூர்த்தங்கள். தெய்வ வடிவு தாங்கிய உயிர்களை அதிகார மூர்த்தம் என்றும், உருவமற்ற அருவ நிலையிலுள்ள சிவன் காரணம் நிமித்தம் உருவெடுத்தால் அதனை ''அவசரம்'' என்றும் சாஸ்திரங்கள் குறிப்பிடும். தூத்துக்குடியில் வாழும் சைவ சித்தாந்த கலாநிதி திரு இராமசங்கு பாண்டியன் அவர்கள் புவனம்தோறும் திருமாலும் பிரம்மாவும் உளர் என்று அறுதியிட்டுக்கூறுவார். 1300 ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழகம் உய்விக்க உதித்த திருஞான சம்பந்தப்பெருமான் ஸ்கந்தலோகத்திலுள்ள அபர சுப்ரமணியர் என்பர்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே

...அப்பர்...

மற்றும்,

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி
ஆங்கே
மாதொரு பாகனர்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையும்
செய்யும்
ஆதலான் இவையிலாதான் அறிந்து அருள்
செய்வன் அன்றே''

- சிவஞான சித்தியார்.

மேலே கண்டுள்ள பொருள்களை சிந்தித்து ஆய்வு செய்தால் தேவதைகள் மற்றும் தெய்வ வடிவு தாங்கிய மூர்த்தங்களும் இறப்பு பிறப்புகளுக்கு உட்பட்டவை என்பது புலப்படும் என்பதில் ஐயமிராது. சைவசித்தாந்த அடிப்படைக்கோட்பாடு உயிர் சார்ந்த வண்ணம் என்பதாகும். ஆகவே சிறு தெய்வங்களானாலும் மற்றும் அதிகார மூர்த்தங்களை வழிபட்டாலும் நாம் அவைகளைப்போல் இறப்பு பிறப்புகளுக்குட்படுவோம் என்பதால் ''ஈசரோடாயினும் ஆசை அறுப்பதே நலம்.''

★★★

## ஆசைக்கோர் அளவில்லை

" ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈச னோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே"

- திருமந்திரம் 2570

# தேனாக அருள் சுரக்கும் தெவிட்டாத அற்புதமே!

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

திரைகடலின் அலையோசை,
திருநாம இசைமுழங்கும்,
திருத்தமிழின் பிரபந்தம்,
திசைநான்கும் எதிரொலிக்கும்,
திருவல்லிக் கேணிநின்ற,
திருமாலின் அவதாரம்,
திருவேங்கடக் கிருஷ்ணனவன்,
திருக்கோலம் போர்க்கோலம்!

பார்த்தனுக்குச் சாரதியாய்,
படைகளோடு பவனிவந்தான்!
பார்த்தனுக்குப் போர்க்களத்தில்,
பகைமைபோக்கத் தோள்கொடுத்தான்!
போர்க்களத்தில் வேதபாடம்
புரியும்படி கீதை சொன்னான்,
''போர்க்களமே வாழ்க்கை''யெனப்
பொதுப்பாடம் எடுத்துரைத்தான்!

சொந்தபந்த மாயையினால்,
சோர்வடையும் துயர்நீக்கி
வந்தகர்ம கடமைகளை,
வரும்பலனை நோக்காமல்,
இந்தவாழ்வில் ஈடேற்றி,
இறைவழியின் வழிநடந்தால்,
அந்தம்நிறை எம்கண்ணன்,
அருள்சுரக்க வளம்தருவான்.

நீண்டதொரு போர்வாளும்,
நீள்மீசை முறுக்கோடும்,
நீண்டபெரும் வீரனாக,
நெடிதுயர்ந்த தோற்றமோடும்,
ஆண்டருளும் கண்ணனிடம்,
அடைக்கலமே என்றடைந்தால்,
ஆண்டிகூட அரசனாக
அள்ளி அள்ளி வழங்கிடுவான்.

ஓராயிர நாமகீதம்,
ஒலித்துவரும் சன்னதியில்,
''நாராயணா'' மந்திரத்தில்,
நடமாடும் சக்திதனை,
ஆராதனை செய்து செய்து
அனுபவத்தில் நலம்பெற்றோர்,
பேரானந்த மடைவதையே,
பெற்றபெரும் பேறென்பார்.

உடலுக்குள் உயிரோடு,
உடனுறையும் ஒருசக்தி,
இடம், காலம் எல்லைதாண்டி,
இயங்கவைக்கும் சக்தியதை,
தொடர்ந்துசெய்யும் பிரார்த்தனையால்,
துடிப்போடு பணிவிக்க,
அடர்ந்துவரச் செய்திடுவான்,
அழகன்என் கண்ணன்இவன்.

இல்லை இல்லை என்போரை,
இங்கேவா என்றழைப்பான்!
எல்லையில்லாப் பொருள்தருவான்,
எடுத்தாளத் தவிக்கவைப்பான்!
தொல்லைதரும் தொடர்புகளைத்
தொலைத்துவிட வேண்டுவோரை,
அல்லல்தரும் புதுத்தொடர்பை
அடுக்கிவைத்து அலைய வைப்பான்!

உள்ளத்தில் உண்மையின்றி,
ஒளிமறைவாய் வேண்டிநின்றால்,
கள்ளன்இவன் கண்டுகொள்வான்!
கருதியதைக் கொடுத்தாலும்,
வெள்ளம்போல் பெருக்கெடுக்க,
விளையாடி வியக்கவைப்பான்!
வள்ளல் இவன் வழங்குவதில்,
வசையின்றி வேண்டிவிடில்,

கோடானு கோடிபக்த
கூட்டம் வரும் அதிசயம் நீ,
தேடிவந்து வேண்டிக்கொண்டால்,
திகைக்க வைக்கும் அதிசயம் நீ,
பாடி வந்து பிரார்த்திப்போர்,
பலன்கள்பெறும் அதிசயம் நீ,
கோடி கோடி அதிசயமாய்
குறையாத அதிசயம் நீ.

காணாத அற்புதங்கள்
காணவைக்கும் அற்புதம் நீ,
பேணாத உன்நினைவைப்
பேணவைக்கும் அற்புதம் நீ,
தானாக வந்தருளும்,
தத்துவத்தின் அற்புதம் நீ,
தேனாக அருள்சுரக்கும்,
தெவிட்டாத அற்புதமே.

(முற்றும்)

# வாழையடி வாழை என வந்த திருக்கூட்டம்

- ''திருப்புகழ் மாமணி'' மு. அருணகிரி

நாட்டில் அதர்மம் தலைதூக்கி மக்களை இறை சிந்தனையிலிருந்து திசை திருப்ப விழையும் போதெல்லாம், ஆன்மீகத்தில் ஈடுபடுத்த தோன்றியவர்களே தபோதனர்கள் என அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு கால கட்டத்திலும் தோன்றும் இத்தகையோர்களையே வாழையடி வாழை எனும் முதுமொழிக்கேற்ப கூறுவது வழக்கம், பிரபஞ்சமாயையிலிருந்து விடுபட்டு தூய நிலையான பேரின்ப வாழ்வைக் காண, தன்னலமற்ற குருவை நாடுதல் அவசியம்.

அருணகிரிப் பெருமான்

''பேற்றைத்தவம் சற்றுமில்லாத என்னைப் பிரபஞ்சமெனும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா. செஞ்சடாடவிமேல்
ஆற்றைப்பணியை இதழியை தும்பையை அம்புலியின்
கீற்றை புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே''

எனப் பாடுகின்றார்.

இப்பாடலில் முதற்கண் மக்கள் யாவரும் பிரபஞ்சம் எனும் சேற்றிலிருந்து கரையேறவே, சிவனார், தம் சடையில் இருந்து கங்கையை பூவுலகில் பாயச்செய்து, பிரபஞ்சச் சேற்றிலிருந்து கரையேற்றுவிக்கவே, செஞ்சடாடவிமேல் ஆற்றை வைத்துள்ளார் என அருணகிரியார் பாடியுள்ளது சிந்திக்கத்தக்கது.

இதனைக் கருத்தில் கொண்டே தான் வள்ளலாரும் வாழ்நாளை வீழ்நாளாக கழித்திருந்தேன் எனக் குறைபட்டிருக்கிறார்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், மக்களுக்கு பிறவிக்கடலைக்கடக்க பலமார்க்கங்களை அருளிப் போந்தனர்கள். வாழையும் கன்றும் எவ்வித மாறுதலும் (தோற்றத்தில்) இல்லாது, ஒன்றைப் போலவே மற்றொன்றும் வளர்வதை பார்க்கலாம். பல கிளைகள், இலைகள் தோன்றும் ஏனைய தாவரங்களைப்போன்று தோன்றுவதில்லை, இதனை வள்ளல் பெருமான் நன்கு உணர்ந்திருந்தார். ஆகையால் எவ்வித தாவரங்களையும் உதாரணத்திற்கு கையாளாது, தாம் பாடிய பாடல் வாயிலாக,

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில்
நான் ஒருவன் அன்றோ''

எனத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஏனைய நாயன்மார்களோ மற்றும் தபோதனர்களோ தங்களது பாக்களில் வாழைமரத்தை மூலப் பொருளாக வைத்து பாடினதாக குறிப்புக்கள் காணவில்லை. இவர் மட்டும் கையாண்டுள்ளது ஒரு தனிச் சிறப்பு.

வள்ளலார் வாழைமரத்தை மூலமாக வைத்து பாடியதின் நோக்கம் என்ன? ஏன் எத்தனையோ தலவிருட்சங்கள் இருப்பினும், இதற்கு ஏன் முக்கியத்துவம் தந்துள்ளார் வள்ளலார் என்பதனை அகக்கண் கொண்டு சிந்தித்தல் அவசியம்.

திருமண வீட்டில் நுழைவாயிலில் வாழைமரத்தைக்கட்டி அலங்கரிப்பது ஏன்? வாழைமரத்தை கட்டாது போனால், திருமண வீடாக இருந்தாலும் சரி, வேறு மங்களகரமான செயல்கள் நிகழ்வதாக இருப்பினும் சிறக்காது. அத்துடன் தென்னையையோ, பனையையோ கட்டலாம். கமுகு, பாக்கு போன்ற மரங்களையும் வாழைமரத்தோடு இணைத்து கட்டினாலும், முதன்மைப் பெறுவது வாழைமரமேயாகும். நம் முன்னோர்கள் ஏன் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் எனப் பெரும்பாலோர் சிந்தித்ததாக தெரியவில்லை. பலர் வாழைமரம் பல வகையிலும் உணவிற்கு பயன்படுவதால் கட்டப்படுகிறது எனக் கருதுகின்றனர்.

திருமணம் செய்து கொள்வதே, சிறப்புற வாழ்வதற்குத்தானே! தம்பதிகள் எப்படி வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதனை விளக்கவே திருமணப் பந்தலில் முதற்கண் வாழைமரத்தைக் கட்டிக் காண்பித்துள்ளனர். வாழை மரம் எப்படி வாழ்ந்து காட்டி கன்றுகளை ஈன்று, பிறகே மடிகின்றது என்பதனை நினைவில் கொண்டு மணத் தம்பதிகள் யாவரும், தமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வாழ்ந்து காட்டி நல்வழி படுத்த வேண்டும் என்பதனை அறிவிக்கிறது.

எல்லா மரங்களிலும் மலடு உண்டு, ஏன் நெற் பயிரிலேயும் நெல் தோன்றாதத் தன்மை உண்டு. அதுபோன்று மலட்டுத் தன்மையில்லாமல் வாழ்தல் வேண்டும் எனும் உணர்ச்சியை வாழைமரம் நமக்கு பாடம் புகட்டுவதாகக் கொள்ளல் வேண்டும்.

எல்லா தாவரங்களுக்கும் விதைகள் உண்டு. இவ் விதைகளைக் கொண்டே செடி கொடி மரங்களை உற்பத்தி செய்வர். ஆனால் வாழைமரத்திற்கு மட்டும் விதையேயின்றி, மண்ணுக்கு அடியில் உள்ள வேர் களின் மூலம் தானாகவே கன்றுகள் தோன்றுவதைக் கவனிக்கலாம். அது போன்று எல்லா சிறுவர்களுக் கும் கல்வி எனும் விதையை பெற்றோர்கள் மூலம் விதைத்து வந்த போதிலும், ஒரு சில சிறுவர்கள், பெற் றோர்களின் அறிவுரை இல்லாமலேயே, இறை யருளால் உணர்த்தப்பட்டு, எல்லோராலும் புகழப்படு கின்றனர். உதாரணத்திற்கு ஞானசம்பந்தர், அருண கிரியார், குமரகுருபரர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் போன்றோர்களாவர். இவர்களை வித்தின்றி விளையும் வாழைக்கன்றுக்கு நிகரான அருட் செல்வர்கள் எனலாம். எவருடைய உதவியின்றியே, எங்கெல்லாம் அதர்மம் ஓங்குகின்றதோ, அங்கெல்லாம் மக்களுக்கு சன்மார்க்கத்தை புகட்டவே, ஞானிகளையும், அரு ளாளர்களையும், வித்தின்றிவிளையும் வாழையைப் போல இறைவனே மூலப் பொருளாக இருந்து தோற்று விக்கிறான். இயற்கையின் அடிப்படையில் எல்லா செடி கொடி மரங்களுக்கும் இலை உதிர்காலம், பூத்துக் காய்க்கும் காலம் எனப் பல வகையான பருவங்கள் இறைவனால் அளிக்கப்பட்ட போதிலும், வாழை மரத் துக்கு மட்டும், வருடம் பூராவும் வாழைப்பூ தோன்றி, வாழைக்காயும், வாழைப்பழமும் தோன்ற இறைவன் வரம் அளித்துள்ளதை கவனித்தல் வேண்டும்.

இதனால் தான் எக்காலத்தும் கிடைக்கக் கூடிய வாழைப்பழத்தை இறைவனுக்கு சமர்ப்பித்து வணங்கு கின்றனர். பொதுவாக அந்தந்தப் பகுதிகளின் மண் வளத்தையும், சீதோஷ்ணத்தையும் பொருத்தியதே மரங்கள் வளரும் தன்மையுடையதை யாவரும் அறிந் திருக்கலாம்.

வாழைமரமோ, எவ்விடத்தும், எக்காலத்தும் வளரும் தன்மையுடையது. மேலும் பருவ காலங்க ளுக்கு ஏற்ப ஏனைய, மரத்தில், பழங்கள் தோன்றிய போதிலும், வாழைமரத்தில் மட்டும் வருடம் பூராவும் வாழைக்காயும், பழமும் தோன்றுவதை அறிந்திருப் பீர்கள். இதனாலன்றோ இறைவனுக்கு சமர்ப்பிக்க வாழைப்பழத்தை பக்தர்கள் பயன்படுத்துகின்றனர்.

அசுத்த நீரைக்கூட வாழை மரத்திற்கு பாயவிட் டால், அதன் நச்சுத்தன்மையையும் புறக்கணிக்காது ஏற்று வளர்ந்து பயனைத் தந்துவிடும். வாழ்க்கையில் எவ்வித இடர்ப்பாடுகள் துன்பங்கள் நேரிடினும் அவற்றை எல்லாம் தாங்கிக் கொண்டு செழிப்போடு வாழ் என்னும் தத்துவத்தை வாழை மரம் நமக்குப் புகட்டுகிறது.

வாழைமரம் ஒரு குலையைத் தள்ளி, காய், கனி தந்து உதவுவதுடன் அதன் இலை, பட்டை, நடுத் தண்டு, வேர் முதலிய எல்லா பாகங்களும் பயன் படுவது போன்றே, நாமும் இந்த சமுதாயத்திற்கு, தன்னலமின்றி வாழ்ந்து முக்கரணங்களாலும் பிறர்க் கென வாழ்வதே சிறந்த இல்லறம் என்பதனை உணர்த்தவே வாழைமரம் திருமணப் பந்தலில் கட்டப் படுகின்றது.

மேலும், தம்பதிகள், யாவர்க்கும் பயன்படும் வகையில் வாழ்ந்து, தங்களுக்கு பிறக்கும் குழந்தை களும், பெற்றோர்களைப் போலவே வாழம் என்ப தனை சொல்லாமல் சொல்லி உள்ளத்தை நெகிழ வைக்கிறது.

செடி கொடி மரங்கள் யாவும் பூக்களை மேல் நோக்கியே பூக்கச் செய்யும் தன்மையுடையது. ஆனால் வாழைமரம் மட்டும் வாழைப்பூவை கீழ்நோக்கியே பூக்கும் தன்மையுடையதை யாவரும் அறிவர்.

வாழைமரம் நன்கு வளர்ந்து முதிர்ச்சியடைந்த தும், வேருக்கும், மேலே வளர்ந்துள்ள இலைகளுக்கும் நடுவே உள்ள மரத்தின் நடுப்பகுதி தூய வெள்ளை நிறம் கொண்ட தண்டு காணப்படும். ஏனைய மரங்க ளில் நடுப்பகுதியைப் பார்த்தால் கருநிறமோ, செந்நி றமோ கொண்டே விளங்கும். இதைத்தான் வைரம் வாய்ந்த பகுதி எனக்கூறுகிறோம். இறைவனை அன்பி னால் உணர்ந்து, ஊற்றெழும் கண்ணீரால் திருமஞ்சனம் செய்து சிந்திக்கும் அடியவர்களின் இதயம், மும்மலங் களையும் அகழ்ந்தெடுத்து, பரிசுத்த வெண்மையான நிலையை தோற்றுவிக்கும்.

இதைத்தான் வள்ளல் பெருமானும் புறத்தே வெள்ளை நிறம் கொண்ட வஸ்திரத்தை அணிந்து, நமக்கு விளக்கம் அளிப்பது சிந்தனைக்குரியது.

ஆண் என்றோ, பெண் என்றோ பனைமரத்தில் உள்ளது போல் இல்லாது வாழைமரங்கள் அனைத்தும், பூத்துக்குலைத்தள்ளும் வாய்ப்பினை பெற்றுள்ளதை யும் சிந்தித்தல் அவசியம்.

இதுபோன்று பல உண்மைத் தத்துவங்களை, மௌனமாக நம் எல்லோர்க்கும் உணர்த்தும் வகையில், வாழைமரம் அன்றும், இன்றும் வளர்ச்சிதன்மையில் சிறிதும் மாற்றம் பெறாது விளங்குவதைப் பார்த்து, எங்கோ ஒரு சிலர்தான் அனுபவித்திருக்க முடியும். வாழைமரத்துக்கு உள்ள தத்துவத்தை உணர்ந்து தான் அண்மைக்காலத்தில் வாழ்ந்து காட்டிய வள்ளல் பெருமான்,

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமரபினில்
நானொருவன் அன்றோ"

எனப் பாடியுள்ளார் எனலாம்.

★★★

# “அம்மான்”

- சேது. சிவா.

மாணிக்கவாசகர் தாம் பாடிய திருவாசகத்தில், சிவபெருமானை, எந்தை, அப்பா, அப்பனே என்று பல பாடல்களில் அழைத்திருந்தாலும்; தாயே என்று அழைப்பதில் தான் அதிகமான உருக்கமும், நெருக்க மும் கொள்கின்றார்.

தன் கடமைகளில் கவனமாக இருந்த தாய், 'ஐயோ! குழந்தையைத் தொட்டியில் உறங்க வைத்தோமே, வெகு நேரம் ஆகி விட்டதே; குழந்தைக்குப் பசிக்குமே' என்று நினைத்துப் பால் ஊட்டுகின்றாள். ஆனால் சிவபெருமான் அந்தத் தாயினும் மிகவும் பரிவு கொண்டு; தன் உடம்பினை உருக்கி, உள்ளத்தின் உள்ளே ஒளி பெருக்கி, முடிவில்லாத இன்பமாகிய தேனைச் சொரிகின்றான் என்று பாடும் பொழுது கூட தாயைத்தான் நினைவு கூர்கின்றார்.

போற்றித் திருவகவலில் முதலாவது போற்றியே ''தாயே ஆகி வளர்த்தனை போற்றி'' என்று பாடுகின் றார்.

திருவெம்பாவையில், மற்றவர்களிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்தி வளர்க்கும், வளையல்கள் அணிந்த கைகளையுடைய அம்மையின் திருவடிச் சிறப் புகளைப் பாடி நீராடுவோம் என்று கூறுகின்றார்.

பேதித்து நம்மை வளர்த்து
எடுத்த பெய்வளை தன்
பாதத் திறம் பாடி
ஆடேலோர் எம்பாவாய்.

மேகம் கருத்து, மின்னல் வீசி, இடி இடித்து மழை பொழிவதனைப் பார்க்கும் பொழுது, கூட அவருக்கு தாயின் நினைவு தான் வருகின்றது. மறை பொழிவதனைத் தாயின் அருள் பொழிவதாகக் காண்கின்றார்.

திரு அம்மானியில், நாய் போன்ற தனக்குத் தாய் போல் முதல் தரமான கருணை புரிந்ததாகக் கூறு கின்றார்.

திருக்கோத்தும்பியில், தாயாக வந்து தன்னை ஆட்கொண்டதாகக் கூறுகின்றார். மேலும் இறைவனைத் தாயான ஈசன் என்கின்றார்.

புணர்ச்சிப் பத்தில், சிவனைத் தந்தையே என்று அழைத்தும்; மூன்று உலகங்களுக்கும் தாய் என்றும், நாய் போன்ற தன்னை ஆட்கொண்ட பேதை என்றும்; பிறவிப் பிணிக்கு ஒப்பற்ற மருந்து என்றும் பாடுகின்றார்.

தாதாய் மூவேழ்
உலகுக்கும் தாயே
நாயேன் தனை ஆண்ட
பேதாய் பிறவிப்
பிணிக்கோர் மருந்தே.

தாயாக வந்து தன் தனத்திலிருந்து பாலைத் தருவான் என்றும்; அப்படித் தாராவிடில் தான் சவலையாகி விடுவேனோ என்றும்; தாயே என்று திருவடிகளைச் சார்ந்ததாகவும்; தன்னிடத்தில் கருணை காண்பிக்காமல் இருப்பதாகவும், தன்னை அடிமையாக ஆட்கொண்ட பின்பு தான் வேண்டாதவனா என்றும் “ஆனந்தமாலை” யில் பாடுகின்றார்.

தாயாய் முலையைத் தருவானே
தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்று உன் தாளடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ?

இப்படி மணிவாசகரால் தாய் என்று அழைக்கப்படும் சிவபெருமான்; அத்தாய்க்கு - பார்வதிக்கு - கணவனாகவும்; மகனாகவும், தந்தையாகவும், உடன் பிறந்த அண்ணனாகவும் இருப்பதாகத் திருபொற் அண்ணத்தில் பாடுகின்றார்.

மின்னிடைச் செந்துவர்
வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்அமர்
மென் மொழியீர்
என்னுடை ஆரமுது
எங்கள் அப்பன்

இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன்
மகன் தகப்பன் தமையன்
எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்டுமுலை
மங்கை நல்லீர்
பொற்றிரும் அண்ணம்
இடித்து நாமே.

சிவபெருமான் சித்திக்குக் கணவனாகவும் மகனாக வும், தகப்பனாகவும், தமையனாகவும் ஆகக் கூடிய முறைகளைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் விளக்கு கின்றன.

சிவமும் நாதமும் ஆகிய சிவபேதங்களிலிருந்து முறையே சக்தியும், விந்துவும் ஆகிய சத்தி பேதங்கள் தோன்றுதலால், சிவம் சத்திக்குத் தகப்பன் ஆகின்றான். சத்திபேதமாகிய பராசத்தியினின்று நாதம் ஆகிய சிவ பேதம் தோன்றுவதால், சத்திக்குச் சிவம் மகன் ஆகின் றான். சத்தி பேதமாகிய விந்துவினின்று சிவபேதமாகிய சதாசிவம் முன்னும், சத்தி பேதமாகிய மனோன்மணி பின்னும் தோன்றுவதால் சத்திக்குச் சிவம் தமையன் ஆகின்றான். சிவமும், சத்தியும், சதாசிவம், மனோன் மணி முதலிய சிவபேத, சத்தி பேதங்களாய் நின்று எல்லா உயிர்களையும் பயத்தலின் சத்திக்குச் சிவன் கண வன் ஆகின்றான்.

சிவபெருமான், இமவான் மகளாகிய பார்வதிக்கு சத் திக்கு - மேற்காட்டிய முறைகளில் அண்ணனாகவும் ஆகின்றான்.

மணிவாசகரால் தாய் என்று போற்றப்படும் சத்திக் குச் சிவன் அண்ணன் ஆகின்ற பொழுது, தாயுடன் பிறந்த தமையன் - தாய் மாமன் ஆகின்றான்.

போற்றித் திருவகவலில் 'அருளிட வேண்டும் அம் மான் போற்றி' என்பதற்கு, ''அருள் செய்ய வேண்டும் 'மாமனே' வணக்கம்'' என்றும்; திருஅம்மானையில் 'முன்னானை' என்று தொடங்கும் பாடலில்

''என்னான என்னப்பன் என்பார்கட்கு
இன்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதும்
காண் அம்மானாய்''

என்கின்ற வரிகளுக்கு, 'எனக்கு என்று ஆனவனே, என் அப்பனே என்று அழைக்கின்றவர்களுக்கு இனிமையான அமுதத்தைப் போன்ற அத்தன்மையனை, மாமனைப் பாடித்திருச்சுண்ணம் இடிப்போம்' என்றும் பொருள் கொள்ளலாம் அல்லவா?

திருநாவுக்கரசு சுவாமிகளும் சிவபெருமானை

''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ''

என்று பாடுகின்றார்.

அதனால் மணிவாசகர் சிவபெருமானை மாமனா கவும் அழைக்கின்றார் என்று பொருள் கொள்வதில் தவறு ஏதும் இல்லையே!

★★★


## மீனாட்சி அந்தாதி - ஒலிநாடா மதிப்புரை

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | தேனிசைக்குயில் சுதாரகுநாதன் |
| பாடல் எழுதியவர் | : | கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம் |
| இசையமைப்பு | : | எல். கிருஷ்ணன் & சுதாரகுநாதன் |

பக்திச்சுவை நனி சொட்ட சொட்ட கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம் இயற்றியுள்ள மீனாட்சி அந்தாதி 100 பாடல்களையும் 30 கர்நாடக ராகத்தில் தேனினும் இனிய குரலில் பாடியுள்ளார் சுதா ரகுநாதன் அவர்கள். ரூ. 45 (நாற்பத்தைந்து மட்டும்) விலை உள்ள இவ்வொலி நாடா பக்தர்கள் அனைவரும் வாங்கிக் கேட்டு மகிழலாம்.

ஒலிநாடா கிடைக்கும் இடம் : **அமுதம் மியூசிக் பிரைவேட் லிமிடெட்.,**
நெ. 3, 4வது குறுக்குத் தெரு,
சி.ஐ.டி. காலனி,
சென்னை - 600 004.

# கண்களே தீபமாய் .....

- கவிஞர் சு. விசுவநாதன்

*பன்னிற அழகு மலர்களைப் பறித்துப்*
*பரமா! உனக்கு அணிவிக்க நினைத்தேன்!*
*என்னிலா உனது அருள் அற்புதத்தை நான்*
*இறைவா! கவியில் இசைத்திட விழைந்தேன்!*

*புண்ணிய நதிகள் ஒன்பதில் கொணர்ந்த*
*புனலால் உன்னைப் பூஜிக்க இருந்தேன்!*
*சந்நிதி முழுதும் சரவிளக்கேற்றித்*
*தந்தையே! உன்னைச் சரணுற எண்ணினேன்!*

*சுவைமிகு மதுரப் பழங்களும் பண்டமும்*
*சுகந்தம் கமழ்ந்திடும் சந்தன வத்தியும்*
*அவையினில் மணக்க, அண்ணலே! உனக்கு*
*ஆரத்தி அழகாய் எடுக்க விரும்பினேன்!*


*தினம் தினம் இவ்விதம் சிந்திப்பது அன்றியே*
*தேவனே! எதனையும் யான் செய்யவில்லை!*
*உனை ஒரு கணமும் மறந்துவிடாமல்*
*உத்தமா! மௌனமாய் உனை நினைக்கின்றேன்!*

*காயமே கோயிலாய்; கண்களே தீபமாய்;*
*கற்பனை யாவும் மானஸ பூஜையாய்*
*தூயனே! எனது மௌனமே துதியாய்த்*
*தோழமையோடு ஏற்றருள் புரிவாய்!*


**தீபாவளி நல்வாழ்த்துகள்**

**திருக்கோயில் வாசகப் பெருமக்களுக்கு எங்கள் மனமார்ந்த**

**தீபாவளி நல்வாழ்த்துகள்.**



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் 14.9.2003 அன்று ஆடித் திருத் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரி சங்கர் இ.ஆ.ப. அவர்கள் வடம்பிடித்துத் தேரோட்டத்தைத் தொடக்கி வைத்தார்கள். ஆலய நிலங்கள் சிறப்புப் பணி அதிகாரி திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி.பிஎல்., திருக்கோயில் இணை ஆணையாளர் - செயல் அலுவலர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் பிஏபிஎல் மற்றும் உபயதாரர் திருக்காரணி எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் முன்னிலையில் இத்திருத்தேர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.



நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேசபெருமாள் திருக்கோயிலில் 15.8.03 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொதுவிருந்து மற்றும் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.